
பக்கங்கள் 27

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 05 புதன்கிழமை 22.10.2025 | அதிர்வு 83

## சீரற்ற காலநிலை: 8,346 பேருக்கு இதுவரை பாதிப்பு

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக, ஆறு மாவட்டங்களில் 2,052 குடும்பங்களைச் சேர்ந்த 05




03

# மாகாணத் தேர்தல்களை காலவரையறையின்றி ஒத்திப்போடத் தீர்மானம்?

## ஜே.வி.பி. மட்டத்தில் முடிவு என்று தகவல்

அடுத்த ஆண்டு நடைபெறவிருந்த மாகாண சபைத் தேர்தல்களை காலவரையின்றி ஒத்திவைக்க அரசாங்கம் அதிகாரப்பூர்வமற்ற முடிவை எடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

தென்னிலங்கையின் 'மவ்ரட்ட' செய்தி நிறுவனம் இதனை நேற்று அறிவித்தது.

கடந்த வாரம், 'மவ்ரட்ட' செய்திப் பத்திரிகை, அடுத்த ஆண்டு முதல் காலாண்டில் மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும், ஜனவரியில் ஜனாதிபதி இறுதி முடிவை எடுப்பார் என்றும் பிரத்தியேகமாக வெளிப்படுத்தியது.

வரவிருக்கும் மாகாண சபைத் தேர்தல்களை மூலோபாய ரீதியாக இலக்காகக் கொண்டு, 2026ஆம் ஆண்டுக்கான 'பிரபலமான பட்ஜெட்டை' முன்வைக்க அரசாங்கம் தயாராகி வருவதாகவும் அந்த அறிக்கை மேலும் கூறியது. 05

# வவுனியா மாநகர சபையின் தெரிவாகிய நிர்வாகத்துக்கு எதிராக இடைக்காலத்தடை

## மேன்முறையீட்டு நீதிமன்றம் வரும் 19 ஆம் திகதி வரை விதித்தது

வவுனியா மாநகர சபையின் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகம், உத்தியோகபூர்வமாகச் செயல்படுவதற்கு அடுத்த மாதம் 19 ஆம் திகதி வரை இடைக்காலத் தடை விதித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

வவுனியா மாநகர சபையின் பிரதி மேயர் பரமேஸ்வரன் கார்த்தீபன் வவுனியா மாநகர சபை எல்லைக்குள் இல்லாமல் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபைக்கு உட்பட்ட எல்லைக்குள் வசிப்பவர் எனத் தெரிவித்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. 05






இல்லாத மேடையிலே எழுதாத நாடகத்தை எல்லோரும் நடிக்கின்றோம்' என்பது 'அபூர்வ ராகங்ககள்' படத்தில் வந்த ஒரு 'ஹிட்' பாடலின் வாசகம்.

நம் மத்தியிலும் இதுபோன்ற சில 'அபூர்வமான அரசியல்வாதிகள்' இல்லாமல் இல்லை.

நேற்று நாடாளுமன்றத்தில் அப்படி ஒரு விடயத்தை நடத்திக் காட்டி இருக்கிறார் நமது தமிழ் எம்.பி. ஒருவர்.

இல்லாத ஒரு பிரேரணை மீது நடக்காத ஒரு விவாதத்தில் சுமார் 16 நிமிடங்கள் பேசி அவர் சாதனை புரிந்திருக்கிறார்.

அதற்குள் இறங்க முன்னர் முதலில் நேற்றைய நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலை ஒரு தடவை பார்த்து விடுவது நல்லது. வாசகர்களின் புரிதல் 03



# முடிந்தால் தேர்தலை நடத்திக் காட்டுங்கள்

## அநுர அரசுக்கு சஜித் அணி சவால்

முடிந்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு அரசுக்குச் சவால் விடுக்கின்றோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அரசின் வாக்கு வங்கி 23 இலட்சத்தால் குறைவடைந்தது.

மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் இந்த நிலைமை மேலும் மோசமாகும். மீண்டும் 3 சதவீதத்துக்கு இறங்கி விடுவோம் என அரசு அஞ்சுகின்றது. முடிந்தால் தேர்தலை நடத்துமாறு அரசுக்குச் சவால் விடுக்கின்றோம்." - என்றார்.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன இணைந்து செயற்படுவதற்கு ஆதரவாளர்கள் வரவேற்புத் தெரிவித்துள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார்.



# யாழில் போதைக்கு அடிமையான இளம் யுவதி ஒருவர் உயிர்மாய்ப்பு!

யாழ்ப்பாணத்தில் போதைக்கு அடிமையான யுவதி ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார்.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழி, ஐயனார் கோயிலடி பகுதியைச் சேர்ந்த கலியுகவரதன் சுருதி (வயது 20) என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

உயிரிழந்த யுவதியும் அவரது காதலனும் போதைக்கு அடிமையானவர்கள் எனத் தெரியவருகின்றது.

மேற்படி யுவதி கடந்த 15ஆம் திகதி தனக்குத் தானே தீ வைத்து தற்கொலைக்கு முயற்சித்துள்ளார்.

இதன்போது தீயை அணைத்த காதலன், அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்தார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி யுவதி நேற்று செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். சாட்சிகளை சாவகச்சேரி பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

## இரகசியம் பரகசியம்...

கருதி நேற்றைய நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலின் தமிழ்ப் பிரதியை இத்துடன் இணைத்துள்ளேன்.

அதன்படி நேற்று நண்பகல் 11.30 மணி முதல் மாலை 5 மணி வரை 'தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை சட்டத்தின் மீது விவாதம்' நடைபெற்றது.

மாலை 5 மணிக்கு 'தனிப்பட்ட தரவு பாதுகாப்பு திருத்தச் சட்ட மூலம்! குழு நிலையில் விவாதம் இன்றி நிறைவேற்றப் பட இருந்தது. அதனால் அந்த தனிப்பட்ட தரவு பாதுகாப்பு திருத்த சட்டம் மூலத் திற்கு நேரம் ஒதுக்கப்படவில்லை. விவா திக்காமலேயே அது அங்கீகரிக்கப்படு வதற்கான ஒழுங்குகளை அரசுத் தரப்பு செய்திருந்தது.

நண்பகல் 11.30 மணி முதல் 5 மணி வரை தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத் தல் அதிகார சபை சட்டத்தின் மீதான விவாதத்தில், அது சுகாதார அமைச்சு சம்பந்தப்பட்டமையால் பல நாடாளு மன்ற உறுப்பினர்களும் தத்தமது பிர தேச மருத்துவ, சுகாதார நிலைமைகள், வைத்தியசாலைகள் பற்றி விலா வாரியாகப் பேசினார்கள்.

விவாத்தை அவதானிப்பதற்காக நாடாளுமன்றத்தில் பிரசன்னமாகி யிருந்த சுகாதார அமைச்சின் அதி காரிகள் அங்கு நாடாளுமன்ற உறுப்பி னர்கள் கிளப்பிய பிரச்சினைகளை குறிப் பெடுத்து உள் வாங்கிக் கொள்வதில் படு மும்முரமாக இருந்தார்கள்.

கிழக்கு மாகாணம் திருகோணமலை யைப் பொறுத்தவரை கடந்த மூன்று மாதங்களுக்கு மேல் திருமலை வைத் தியசாலையின் பிரேத அறை குளிரூட்டி இன்மையால் செயற்படவில்லை. அது மாத்திரமல்ல. ஆஸ்பத்திரியில் பல பிரச்சினைகள் நீண்ட காலமாகத் தீர்க் கப்படாமல் உள்ளன. கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளரின் அதிகாரங்களை கிழக்கு மாகாண ஆளுநர் பிடுங்கி வைத் துக் கொண்டு தம்மிஷ்டப்படி, பந்தாடி சுகாதாரத் துறையினரை இடமாற்றம் செய்கின்ற பிரச்சினை உட்பட பல மருத் துவப் பிரச்சினைகள் இருக்கின்றன.

அப்படி இருக்கையில் இந்த மருத்துவ – சுகாதாரப் பிரச்சனைகளை பேச கூடிய அந்தச் சட்டமூலத்தின் விவாத நேரத்தில் விவாதிக்கப்படவே தொடர்பற்ற வேறு ஒரு அமைச்சின் கீழான (தொழில்நுட்ப அமைச்சின் கீழான) 'தனிப்பட்ட தரவு பாதுகாப்பு திருத்த சட்டம் தொடர்பாக' ஒரு விடயத்தை எழுதிக் கொண்டு வந்து தம்பாட்டில் 16 நிமிடங்கள் பேசியிருக் கிறார் – மன்னிக்கவும் வாசித்திருக் கின்றார் – திருகோணமலை மாவட் டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ ரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பி னர் குகதாசன்.

குகதாசன் பேசத் தொடங்கியதுமே அவர் பேசும் விடயம் பற்றிய விவாதம் இதுவல்ல என்பதை சபைக்கு தலைமை வகித்த உறுப்பினர் குகதாசனுக்கு சுட்டிக் காட்டினார். ஆயினும் அதனை ஏற்கா மல் குகதாசன் வியாகியானம் கூறியமையால் நீங்கள் ஏதோ பேசி முடியுங்கள் என்று சபைக்குத் தலைமை வகித்தவர் அனுமதித்தார்.

04 ▶

පාර්ලිමේන්තුවේ විපක්ෂ නායක කාර්යාලය

பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம்

OFFICE OF THE LEADER OF THE OPPOSITION OF PARLIAMENT

எனது இல: OLO/PA/119/6 — 2025 ஒக்தோபர் 14

பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சிக் குழுவின்
கௌரவ உறுப்பினர்கள் அனைவருக்கும்.

அன்பின் கௌரவ உறுப்பினர்களுக்கு,

**2025 ஒக்தோபர் மாதம் இரண்டாவது பாராளுமன்ற வாரத்துக்கான பாராளுமன்ற அமர்வுகள் தொடர்பான நிகழ்ச்சி நிரல்.**

2025-10-10 ஆந் திகதி நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டவாறு 2025 ஒக்தோபர் மாதம் இரண்டாவது வாரத்துக்கான பாராளுமன்ற அமர்வுகள் தொடர்பான நிகழ்ச்சி நிரல் பின்வருமாறு

**2025 ஒக்தோபர் 21 செவ்வாய்**

மு.ப.9.30 – மு.ப.10.00 - பாராளுமன்ற நிலையியற் கட்டளை இலக்கம் 22(1 தொடக்கம் 6 வரையிலான விடயங்கள்) இன் பிரகாரம் பாராளுமன்ற அலுவல்கள்

மு.ப.10.00 - மு.ப.11.00 - வாய்மூல விடைக்கான வினாக்கள்

மு.ப.11.00 - மு.ப.11.30 - பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் கேள்வி

மு.ப.11.30 - பி.ப.5.00 - தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் கட்டளை *(2025-07-21 திகதிய 2446/34 இலக்க அ.வ.ப.)*
(கௌரவ சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்)
இந்த விவாதத்தின் இறுதியில் வாக்கெடுப்பு நடைபெறலாம்.

பி.ப.5.00 - தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலம் – குழுநிலை
(கௌரவ டிஜிடல் பொருளாதார அமைச்சர்)

பி.ப.5.00 - பி.ப.5.30 எதிர்க்கட்சியின் சபை ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை

*(பகல்போசன இடைவேளை பி.ப.12.30 தொடக்கம் பி.ப.1.00 வரை)*

**2025 ஒக்தோபர் 22 புதன்**

மு.ப.9.30 – மு.ப.10.00 - பாராளுமன்ற நிலையியற் கட்டளை இலக்கம் 22 (1 தொடக்கம் 6 வரையிலான விடயங்கள்) இன் பிரகாரம் பாராளுமன்ற அலுவல்கள்

மு.ப.10.00 - மு.ப.11.00 - வாய்மூல விடைக்கான வினாக்கள்

மு.ப.11.00 - மு.ப.11.30 - பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் கேள்வி

மு.ப.11.30 - பி.ப.4.30 (i) விசேட வியாபாரப்பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை – அங்கீகரிப்பதற்கு
*(2025-08-25 திகதிய 2451/10 இலக்க அ.வ.ப)*

(ii) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்_ அங்கீகரிப்பதற்கு
(இந்த விதிகள் *2025-10-21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.)*
(கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்)
இந்த விவாதத்தின் இறுதியில் வாக்கெடுப்பு நடைபெறலாம்.

பி.ப.4.30 - பி.ப.5.30 அரசாங்கக் கட்சியின் சபை ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை

*(பகல்போசன இடைவேளை பி.ப.12.30 தொடக்கம் பி.ப.1.00 வரை)*

**2025 ஒக்தோபர் 23 வியாழன்**

மு.ப.9.30 – மு.ப.10.00 - பாராளுமன்ற நிலையியற் கட்டளை இலக்கம் 22 (1 தொடக்கம் 6 வரையிலான விடயங்கள்) இன் பிரகாரம் பாராளுமன்ற அலுவல்கள்

மு.ப.10.00 - மு.ப.11.00 - வாய்மூல விடைக்கான வினாக்கள்

மு.ப.11.00 - மு.ப.11.30 - பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் கேள்வி

மு.ப.11.30 - பி.ப.5.30 - போதைப்பொருள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை ஒழிப்பதற்கான ஒரு தேசிய வேலைத் திட்டம் மற்றும் சட்டரீதியான கட்டமைப்பை வலுப்படுத்துதல் குறித்த சபை ஒத்திவைப்பு விவாதம் - (அரசாங்கக் கட்சியின் சபை ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை)

*(பகல்போசன இடைவேளை பி.ப.12.30 தொடக்கம் பி.ப.1.00 வரை)*

**2025 ஒக்தோபர் 24 வெள்ளி**

மு.ப.9.30 – மு.ப.10.00 - பாராளுமன்ற நிலையியற் கட்டளை இலக்கம் 22 (1 தொடக்கம் 6 வரையிலான விடயங்கள்) இன் பிரகாரம் பாராளுமன்ற அலுவல்கள்

மு.ப.10.00 - மு.ப.11.00 - வாய்மூல விடைக்கான வினாக்கள்

மு.ப.11.00 - மு.ப.11.30 - பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் கேள்வி

மு.ப.11.30 - பி.ப.5.00 பின்வரும் காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பான அனுதாபப் பிரேரணைகள் :

(i) கௌரவ லொஹான் ரத்வத்தே
(ii) கௌரவ ஹீன்மகத்மயா லியனகே
(iii) கௌரவ டிக்ஸன் ஜே பெரேரா
(iv) கௌரவ கலாநிதி மேர்வின் த சில்வா
(v) கௌரவ வை ஜீ பத்மசிரி
(vi) கௌரவ ஆர் எம் ஆர் சூலபண்டார
(vii) கௌரவ மாணிக்கவாசகர் கனகசபாபதி ஈழவேந்தன்

பி.ப.5.00 - பி.ப.5.30 எதிர்க்கட்சியின் சபை ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை

*(பகல்போசன இடைவேளை பி.ப.12.30 தொடக்கம் பி.ப.1.00 வரை)*

02. மேலே குறிப்பிட்ட விவாதங்களில் கலந்து கொள்ளுவதற்கு விருப்பமுள்ள கௌரவ உறுப்பினர்கள் இது பற்றி முன்னதாகவே பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்துக்கு தயவு செய்து அறிவிக்கவும்

1. திருமதி. நிராஷா தில்ருக்ஷி - 011-2777263
(எதிர்க்கட்சித் தலைவரின் செயலாளரின் ஒருங்கிணைப்புச் செயலாளர்) (கை.தொ:077-1352332/070-2804945)

நன்றி,

இவ்வண்ணம் - உண்மையுள்ள,

கயந்த கருணாதிலக (பா.உ)
பாராளுமன்ற எதிர்க்கட்சி முதற்கோலாசான்

# பருத்தித்துறை சந்தையில் மழை வெள்ளம் புகுந்தது





பருத்தித்துறையில் நேற்று அதி காலை முதல் பெய்த மழை காரணமாக பருத்தித்துறை மரக்கறி சந்தை தொகுதி வெள்ளத்தில் மூழ்கும் நிலை ஏற்பட்டது.

வீதியூடாக பாய்ந்தோடும் வெள்ள நீர் பருத்தித்துறை முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள சந்தை தொகுதிக்குள்ளும் உட்புகுந்தது.

அத்துடன், சந்தை தொகுதி மேற் கூரை மூலம் கீழிறங்கும் மழை நீரும் சேர்ந்து சந்தை தொகுதி வெள்ளக்காடாக காட்சியளித்தது.

இதன் காரணமாக அங்கு வாழைப்பழ வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் வியாபாரிகள் பெரிதும் பாதிப்பினை சந்தித்திருந்தனர்.

அத்துடன், மரக்கறி வியாபாரிகளும் பாதிப்புகளை சந்தித்திருந்ததுடன் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்திருந்தனர்.

## மூன்றாம் பக்கத் தொடர்ச்சி

**இரகசியம் பரகசியம்...**

அந்தக் காணொலி இணைப்பும் இத்தோடு உள்ளது.

CLICK HERE VIDEO

இல்லாத ஒரு பிரேரணை மீது நடக்காத ஒரு விவாதத்திற்கு தன் பாட்டில் 16 நிமிடங்களை வீணாக்கி, தமிழரசுக் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தையும் பாழாக்கி, மற்றைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் முன்னால் கேலிக்குரியவராகவும் மாறியிருக்கிறார் குகதாசன்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளுக்கு கிடைக்கும் விவாத நேரத்தை இத்தகைய வழியில் வீணாக்கினால் மக்கள் பிரச்சினை எப்படி தீர்க்கப்படும்? கோணேசநாதருக்குத்தான் வெளிச்சம்.

* * *

தெரிவு செய்யப்பட்ட வவுனியா மாநகர சபை நிர்வாகத்தை கூண்டோடு இடைநிறுத்தி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தடை உத்தரவு தமிழர் பிரதேசத்திலும் பல உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் மட்டத்தில் வயிற்றைக் கலக்கி இருக்கும் என்பது நிச்சயம்.

வவுனியா மாநகர சபை தொடர்பில் தொடுக்கப்பட்டது உரிமை கேள் நீதிப் பேராணை (writ of Quo - Warranto)

இதே போன்ற அடிப்படையில் சாவகச்சேரி நகர சபை மற்றும் சாவகச்சேரி பிரதேச சபையில் தெரிவு செய்யப்பட்ட பல உறுப்பினர்களுக்கு எதிராக தேர்தல் ஆட்சேபனை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு இருக்கின்றன. அவை வரும் 27ஆம் தேதியும், 3 ஆம் திகதியும் வடக்கு மாகாண மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றன.

இந்த சாவகச்சேரி வழக்குகள் பற்றி பல தடவைகள் விரிவாக இப்பத்தியில் எழுதியுள்ளேன். அந்த வழக்குகளை ஒட்டி நான் குறிப்பிட்டு வருகின்ற கருத்துக்கள் ஒரு பத்திரிகை ஆசிரியரின் அபத்தமான கற்பனை என்று சட்டத்தரணி என்று தம்மை கூறிக் கொள்கின்ற – நீதிமன்றத்தில் முன்னிலையாகாத – ஓர் அரசியல் தலைவர் செவ்வியொன்றில் குறிப்பிட்டு இருக்கின்றார் என அறிகிறேன். சாவகச்சேரி விவகாரம் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்ந்து கட்டவிழும்போது நான் குறிப்பிட்ட விடயங்களின் தாற்பரியம் அவருக்கும் சேர்ந்து புரியும் என்று நினைக்கிறேன்.

வவுனியா மாநகரசபை தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தடை உத்தரவுக்கு எதிராக உடனடியாக உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட இருப்பதாக அறிய வந்தது.

அதேசமயம் வவுனியாவில் நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு வழங்குவதற்கு காரணமாக அமைந்த அதே விடயத்தில் யாழ் மாநகர சபையிலும் சில உறுப்பினர்கள் எதிர்த்தரப்பில் உள்ளனர்.

மட்டக்களப்பில் தம்முடைய வாக்கைப் பதிந்து வைத்துக்கொண்டு, யாழ் மாநகர சபையில் போட்டியிட்டு உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டவர் தமக்கு எதிராக யாரும் இதுவரை வழக்குத் தாக்கல் செய்யவில்லை என்ற மிதப்பில் மாநகர சபைக்குள் அதிக ஆரவாரம் செய்கின்றார் என்று கேள்வி. அந்த ஆரவாரத்தின் காரணமாக அவருக்கு எதிராக விரைவில் வழக்கு வரக்கூடிய வாய்ப்பு அதிகரித்து இருப்பதாகத் தெரிகிறது.

உள்ளூராட்சி சபைகளின் வேட்பு மனுக்கள் விடயத்தில், கட்சிகள் பொறுப்பாக நடக்காத காரணத்தினால் பல சபை உறுப்பினர்களின் பதவிகளும், பல சபைகளின் நிர்வாகங்களும் நெருக்கடியை சந்திக்கும் சூழலில் சிக்கியிருக்கின்றன என்பதுதான் நிலைமை.

# முதலமைச்சர் வேட்பாளர் யார்?

## பிரதான கட்சிகள் தீவிர கவனம்

வரும் மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளர்களாகக் களமிறங்கக்கூடிய நபர்கள் தொடர்பில் பிரதான கட்சிகள் தீவிர கவனம் செலுத்தியுள்ளன.

ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தி, 9 மாகாணங்களிலும் தேசிய மக்கள் சக்தியாகத் திசைக்காட்டி சின்னத்தின் கீழ் களமிறங்கவுள்ளது.

குறிப்பாக வடக்கு மாகாண சபைக்கான தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக யாரை களமிறங்குவது என்பது பற்றி தேசிய மக்கள் சக்தி தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது.

உத்தேச முதலமைச்சர் பட்டியலில் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் சுந்தரமூர்த்தி கபிலனின் பெயர் முன்னணியில் இருப்பதாகத் தெரியவருகின்றது. ஏனைய சிலரின் பெயர்களும் பரிசீலனையில் உள்ளன.

உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது இவர், யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் வேட்பாளராகக் களமிறக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு மாகாண முதலமைச்சரைத் தெரிவு செய்யும் பொறுப்பு அமைச்சர்களான பிமல் ரத்நாயக்க மற்றும் இராமலிங்கம் சந்திரசேகரனிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, கட்சி தீர்மானிக்கும் பட்சத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறங்குவதற்குத் தயார் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் அறிவித்துள்ளார்.

# பிறந்து 25 நாளேயான ஆண் சிசு உயிரிழப்பு

மூளையில் கிருமித் தொற்று ஏற்பட்டு பிறந்து 25 நாளேயான ஆண் சிசு ஒன்று உயிரிழந்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்த சிசு கந்தர்மடம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆதித்தன் கிருசாலினி என்ற 25 நாள் சிசு வாகும்.

கடந்த மாதம் 27 ஆம் திகதி தனியார் வைத்தியசாலையில் சிசு பிறந்த நிலையில் காய்ச்சல் ஏற்பட்டதால் யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த முதலாம் திகதி அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று செவ்வாய்க் கிழமை சிசு உயிரிழந்துள்ளது.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை யாழ்ப்பாண பொலிஸார் நெறிப்படுத்தினர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**மாகாணத் தேர்தல்களை...**

அந்த வெளிப்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில், அரசாங்கத்தின் சக்தி வாய்ந்த அமைச்சர் கே.டி. லால்காந்தவும், அடுத்த ஆண்டு தேர்தலை நடத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக அறிவித்திருந்தார்.

இருப்பினும், கடந்த வாரம் ஜே.வி.பிக்குள் நடத்தப்பட்ட பல சுற்று விரிவான கலந்துரையாடல்களைத் தொடர்ந்து, மாகாண சபைத் தேர்தலை காலவரையின்றி ஒத்திவைக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தக் கலந்துரையாடல்களின் போது, மாகாண சபை முறைமை, வடக்கு மற்றும் கிழக்கிற்கான அரசியல் தீர்வு மற்றும் அதிகாரப் பகிர்வு பொறிமுறை குறித்த ஜே.வி.பியின் நிலைப்பாடு ஆழமாக ஆராயப்பட்டது. இந்த விஷயங்களில் இறுதி முடிவு எட்டப்படும் வரை தேர்தலை ஒத்திவைக்க ஒரு திட்டம் முன்வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் விளைவாக, அடுத்த ஆண்டு பிரபலமான பட்ஜெட்டை முன்வைக்கும் திட்டத்தையும் அரசாங்கம் திரும்பப் பெற்றுள்ளதாக அறியப்படுகிறது.

இந்த முன்னேற்றம் தொடர்பான கூடுதல் விவரங்கள் இந்த வார மவ்ரட்டா செய்தித்தாளின் 'அரச ரகசியங்கள்' பத்தியில் வெளியிடப்படும் என்று அந்த நிறுவனம் தெரிவித்துளது.

**வவுனியா மாநகர...**

வவுனியா மாநகர சபை எல்லைக்குள் வசிக்காத ஒருவர் மாநகர சபைக்கு உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டமை தவறென தெரிவித்து தேசிய மக்கள் கட்சியின் சார்பில் விஜயகுமார் என்பவரும் சுயேச்சை குழு உறுப்பினரான பிரேமதாஸ் சிவசுப்ரமணியம் என்பவரும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குந்தாக்கல் செய்திருந்தனர்.

அந்த வழக்கை கடந்த நான்கு தவணைகள் விசாரித்த பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த இடைக்கால தடை உத்தரவை வழங்கி இருக்கின்றது.

பிரதி மேயர் பரமேஸ்வரன் கார்த்தீபனின் ஆதரவுடன் ஒரு மேலதிக வாக்கினால்தான் தற்போதைய மேயர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். இந்த பின்புலத்திலேயே இப்போது இடைக்காலத் தடை உத்தரவு விதிக்கப்பட்டு இருக்கின்றது.

**சீரற்ற காலநிலை...**

8,346 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனப் பேரிடர் முகாமைத்துவ மையம் தெரிவித்துள்ளது.

இதுவரை 335 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. மேலும் பல பகுதிகளில் வெள்ளம், மண்சரிவு மற்றும் பலத்த காற்றால் சேதங்கள் பதிவாகியுள்ளன.

அவிசாவளையில் 17 வயது மாணவி ஒருவர் வடிகாலில் விழுந்து உயிரிழந்துள்ளார். நாட்டின் பல பகுதிகளில் வீடுகள் மற்றும் சாலைகள் சேதமடைந்துள்ளன.

வளிமண்டலவியல் திணைக்களம், அடுத்த 12 மணி நேரத்தில் 150 மில்லி மீற்றருக்கும் மேற்பட்ட கனமழை பெய்யக்கூடும் என நேற்று முன்னிரவில் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மழை காரணமாக பல நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. அதேசமயம் மண்சரிவால் மலையக ரயில் போக்குவரத்து தடம் புரண்ட நிலையில், நாளை நண்பகல் வரை சேவைகள் வழமைக்கு திரும்பாது என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, 11 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், பல பகுதிகளில் வெள்ளப் பெருக்கு மற்றும் போக்குவரத்து நெரிசல் நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இசைப்பிரியா படுகொலை: கபில குழுவுக்குத் தொடர்பு!

## பொன்சேகா பரபரப்புப் பேட்டி



விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் போராளி இசைப்பிரியா படுகொலை செய்யப்பட்ட விடயத்தில் முன்னாள் இராணுவப் பிரதானி கபில ஹெந்தவிதாரணவின் குழுவுக்குத் தொடர்புள்ளது என்று முன்னாள் இராணுவத் தளபதியான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் சரத் பொன்சேகா அவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கோட்டாபயவின் மூளையாகச் செயற்பட்ட கபில ஹெந்தவிதாரண இறுதிப் போரின்போது 2 இலட்சத்து 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் சரணடைந்தனர். பல்லாயிரக்கணக்கான விடுதலைப்புலிகளும் மக்களுடன் மக்களாகச் சரணடைந்தனர்.

அவர்களுக்குத் தேவையான உடை உணவு, மருந்து என்பவற்றை வழங்கி, புனர்வாழ்வில் இருந்து செல்லும் வரை அனைவரையும் முறைப்படி பாதுகாத்தோம். எனினும், இறுதிப் போரின்போது இடம்பெற்ற சில விரும்பத்தகாத சம்பவங்கள் தொடர்பில் இன்றளவும் பெரும் சர்ச்சைகள் நிலவுகின்றன.

அவற்றில் ஒன்று இசைப்பிரியாவின் படுகொலை. இசைப்பிரியா படுகொலை செய்யப்பட்ட விடயத்தில், முன்னாள் இராணுவப் பிரதானி கபில ஹெந்தவிதாரணவின் குழுவுக்குத் தொடர்புள்ளது என்று உறுதியாகக் கூறுகின்றேன்.

இந்த விடயம் தொடர்பில் தீர்க்கமான விசாரணைகள் இடம்பெற வேண்டும். அத்துடன், சரணடைந்த சிலரைக் கொலை செய்த குற்றச்சாட்டு ஜகத் ஜயசூரிய மீதும் காணப்படுகின்றது.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் ஜகத் ஜயசூரியவுக்கு எதிராக நான் இராணுவ விசாரணைகளைக்கூட முன்னெடுத்தேன். விசாரணைகள் இடம்பெறும்போது இடைநடுவில் நான் பதவி நீக்கப்பட்டு ஜகத் ஜயசூரிய இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டார். அப்போது, ஜகத் ஜயசூரிய மீதான குற்றச்சாட்டுத் தொடர்பில் மஹிந்தவிடம் தெரிவித்தேன்.

எனினும், அதனைக் கருத்தில் கொள்ளவில்லை. இராணுவத்தினருக்கு எதிரான விசாரணைகள் தொடர்பில் முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சர்வதேசத்தில் இருந்தும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதால், சர்வதேச கண்காணிப்பாளர்களின் கீழ் விசாரணைகளை முன்னெடுக்க முடியும்.

அப்படிச் செய்யும் பட்சத்தில் எமது விசாரணைகள் வெளிப்படைத் தன்மையுடன் அமையும். முறையான சாட்சிகள் இருக்குமாக இருந்தால் நியாயமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை." – என்றார்.

இராணுவப் பிரதானியாக இருந்த கபில ஹெந்தவிதாரண பின்னர் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராகச் செயற்பட்டார்.

அதேவேளை கபில ஹெந்தவிதாரண, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களின் மூளையாகச் செயற்பட்டார் என்றும் குற்றச்சாட்டுகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# முதலை இழுத்துச் சென்ற மீனவர் சடலமாக மீட்பு!

முதலை இழுத்துச் சென்ற மீனவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பாந்தோட்டை, ஹுங்கம, கலமெட்டிய பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 18 ஆம் திகதி இரவு அம்பாந்தோட்டை, ஹுங்கம, கலமெட்டிய கடற்கரைப் பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த போது முதலை இழுத்துச் சென்றுள்ள நிலையில் இரண்டு நாட்கள் கழித்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தப் பகுதியில் முதலைகள் இழுத்துச் செல்லப்பட்டு மீனவர்கள் பலர் உயிரிழந்துள்ளனர் என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

பல்வேறு பகுதிகளில் பிடிக்கப்படும் முதலைகளை வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் கலமெட்டிய கடற்கரை பகுதியில் விட்டுச் செல்கின்றனர் என்றும் பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.



# தீபாவளியன்று அதிரடி வேட்டை! 4 ஆயிரத்து 534 பேர் சிக்கினர்!!

தீபாவளிப் பண்டிகை தினமான நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் 4 ஆயிரத்து 534 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலை பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 21 பேரும், சந்தேகத்தின் பேரில் 641 பேரும், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 241 பேரும், திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 174 பேரும், மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 31 சாரதிகளும், கவனக்குறைவாக வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 17 சாரதிகளும், ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 3 ஆயிரத்து 409 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.



# இளம் குடும்பஸ்தர் வெட்டிப் படுகொலை: சகோதரர் இருவர் உட்பட நால்வர் கைது!

இளம் குடும்பஸ்தர் கொலை தொடர்பில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கல்கிசை தலைமையகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கல்கிசை – இரத்மலானை பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த நபர் ஒருவரை வெளியே இழுத்துச் சென்று கூரிய ஆயுதங்களால் வெட்டிப் படுகொலை செய்த சம்பவம் தொடர்பிலேயே மேற்படி நால்வரும் கல்கிசைப் தலைமையகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்கிசை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளின் அடிப்படையில் சந்தேக நபர்கள் நால்வரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் அடங்குகின்றனர்.

சந்தேகநபர்களிடமிருந்து கத்தி மற்றும் வாள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொலை செய்யப்பட்டவர் மொரட்டுவை பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய இளம் குடும்பஸ்தர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிசை தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# செவ்வந்தி கைது விடயத்தில் ஊடகக் கண்காட்சி எதற்கு?

## இப்படி சீற்றத்துடன் விமல் கேள்வி



"வெளிநாட்டில் வைத்து கே.பியைக் கைது செய்து இலங்கைக்குக் கொண்டு வந்தபோது ஊடகக் கண்காட்சி காண்பிக்கப்படவில்லை. எனினும், செவ்வந்தி விடயத்தில் அவ்வாறு நடப்பது தவறான அணுகுமுறையாகும்."

– இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரசன்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"வெளிநாட்டில் கைது செய்யப்பட்டு நாட்டுக்குக் கொண்டுவரப்படும் குற்றவாளி விமானத்தில் இறங்குவது முதல் எல்லாத் தகவல்களும் மிகவும் சுவாரஷ்யமாக ஊடகங்களில் வெளியாகின்றன. ஊடகக் கண்காட்சி காண்பிக்கப்படுகின்றது.

இதற்கு முன்னர் இருந்த அரசுகள், இதை விடவும் பயங்கரமான குற்றவாளிகளை வெளிநாட்டில் கைது செய்து அழைத்து வந்துள்ளன. உதாரணம் கே.பி. என்பவரைக் கைது செய்து நாட்டுக்குக் கொண்டு வந்தபோது, அவர் எப்படி வந்தார் என்பதுகூட யாருக்கும் தெரியாது.

செவ்வந்தி விடயத்தில் ஊடகங்களில் வெளியாகும் செய்திகளைப் பார்க்கும்போது, பிரபலமாவதற்கு இதுதான் வழி என்ற தவறான உணர்வு சிறார்கள் மத்தியில் ஏற்படக்கூடும்.

எமது நாட்டு விளையாட்டு வீரர்கள் வெளிநாடுகளில் சென்று பதக்கங்கள் வென்று வரும்போது, அவற்றுக்கு ஏன் முக்கியத்துவம் வழங்கப்படவில்லை. நான் ஊடகங்களைக் குற்றஞ்சாட்டவில்லை. பொலிஸார் இதனை ஊடகக் கண்காட்சியாக்கியுள்ளனர்." – என்றார்.



# 11 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்!

இலங்கையில் நிலவும் சீரற்ற கால நிலையால் 11 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, பதுளை, கொழும்பு, காலி, கண்டி, களுத்துறை, கேகாலை, குருநாகல், மாத்தளை, மாத்தறை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.



# ஹரக் கட்டாவின் பாதுகாப்புக்காக சுமார் 87 அதிகாரிகள் கடமையில்!

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப் பட்டுள்ள பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த ஹரக் கட்டா என்றழைக்கப் படும் நந்துன் சிந்தக என்பவரின் பாது காப்புக்காகச் சுமார் 87 அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள னர் என்று "ஹரக் கட்டா"வின் சட்டத் தரணி, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் தெரிவித்துள்ளார்.

ஹரக் கட்டாவின் சட்டத்தரணி, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிய கடி தத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள் ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது:-

ஹரக் கட்டா இரண்டு ஆண்டு களுக்கும் அதிக காலமாக சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள் ளார்.

அதிக காலமாகச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டவர் 'ஹரக் கட்டா' தான்.

ஹரக் கட்டாவின் பாதுகாப்புக்காக சுமார் 87 அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். - என்றுள்ளது.

நமது கருத்து

# நியாயமான எச்சரிக்கை

முதல் தடவையாக ஆட்சிக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்திக்கு சில விடயங்கள் புரியாமலிருக்கலாம்.

ஆட்சிக் கட்டில் தாம் இருக்கும் போது தாம் புரிகின்ற - இழைக்கின்ற - தவறுகளின் தாற்பரியம் அல்லது விளைவு புதிதாக அதிகாரத்திற்கு வந்தவர்களுக்கு தெரியாமல் இருக்கலாம். ஆனால் அதிகாரத்தை விட்டு விலகிய பின்னர் மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தும் சிக்கல்களுக்கு இப்போது மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் வழி வகுத்து விடலாம்.

அதனையே பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் சட்டத்தரணியுமான உதய கம்மன்பில முன்னெச்சரிக்கையாக இப்போதே தெரிவித்திருக்கின்றார். அதில் அர்த்தம் இருப்பதாகவே தெரிகின்றது.

நாட்டின் ஜனாதிபதி தமது வெளிநாட்டு விஜயத்துக்கு மத்தியில் இன்னொரு நாட்டுக்கு சென்று வந்தமை அதிகார துஷ்பிரயோகம் என்று கைது செய்து, நீதிமன்றில் நிறுத்தி, விலங்கிட்டு, விளக்க மறியலில் வைத்த இந்த அரசுத் தரப்பினர், இப்போது தாங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக ஒவ்வொருவரும் இழைக்கும் தவறு குறித்து புரியாமல் இருக்கின்றனர். அதைத்தான் உதய கம்மன்பில இப்போது சுட்டி காட்டி இருக்கிறார்.

அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கொடுப்பனவுகளை அரசாங்கத் தரப்பினர் கையாளும் முறைமை குறித்தே அவர் கடுமையாக விமர்சித்திருக்கின்றார்.

அரச எம்.பிக்கள் தங்களின் உத்தியோகபூர்வ பணிக்கான செலவினங்களுக்குரிய விசேட கொடுப்பனவுகளை அச்செலவினங்களுக்குப் பயன்படுத்தாமல், வெட்டி, கட்சிப் பணிகளுக்கு வழங்குவது தவறு என்பதையே அவர் சுட்டிக் காட்டுகின்றார்.

"அதிகாரபூர்வ நோக்கங்களுக்காக பொது மக்களிடம் இருந்து பெறப்பட்ட நிதியை, அரசியல் கட்சி நிதிக்காக நன்கொடையாக வழங்குவது சட்டப்படி குற்றம்" என்று அவர் தெளிவுபடுத்துகின்றார்.

எம்.பி.க்கள் தங்கள் கொடுப்பனவுகளை அதற்கான பணிக்குச் செலவிடாமல் கட்சிப் பணிகளுக்கு வழங்குவதற்குத் தடை விதிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர முன்வைத்த யோசனைக்கு பதிலளித்த கம்மன்பில, ஒருவரின் சம்பளத்தைச் செலவழிப்பதற்கும், பொது கொடுப்பனவுகளைத் தவறாகப் பயன்படுத்துவதற்கும் இடையே தெளிவான வேறுபாடு உள்ளது என்று விளக்கியுள்ளார்.

எம்.பி.க்கள் தங்கள் சொந்த வருமானத்தை எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். ஆனால், அலுவலகம், எரிபொருள், தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்து போன்றவற்றுக்காக வழங்கப்படும் கொடுப்பனவுகள், அந்த நோக்கம் கொண்ட பொதுப் பணிக்காக மட்டுமே கண்டிப்பாகச் செலவிட வேண்டும். வாடகை, மின்சாரம் அல்லது உபகரணங்கள் போன்ற அலுவலகப் பராமரிப்புக்காகக் கொடுக்கப்படும் நிதியை ஒரு கட்சிக்குக் கொடுக்க முடியாது. அவ்வாறு செய்வது, பொதுப் பணத்தைத் தவறாகப் பயன்படுத்துவதாகும் என்று அவர் மேலும் கூறினார். இத்தகைய செயல்கள் 'பொதுச் சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்துவதாகும்.' இது பிணையில் வெளிவர முடியாத குற்றம் என்றும் கம்மன்பில எச்சரித்திருக்கின்றார்.

"இந்த அரசுப் பணத்தை தவறாகப் பயன்படுத்த இடமளிக்கும் 159 அரச தரப்பு எம்.பி.க்களும் ஒரு தீவிரமான குற்றத்தைச் செய்கிறார்கள். அடுத்த அரசாங்கத்தின் கீழ், வெலிக்கடை சிறையில் அவர்களுக்காகவே ஒரு முழு விடுதி ஒதுக்கப்பட வேண்டி வரும்" என்று கம்மன்பில எச்சரிப்பதில் அர்த்தம் பொதிந்திருப்பதாகவே தோன்றுகின்றது.



# லக்மாலி ஹேமச்சந்திர எம்.பிக்கு எதிராக நீதிச் சேவை ஆணைக்குழுவில் முறைப்பாடு

தேசிய மக்கள் சக்தியின் நாடாளு மன்ற உறுப்பினர் லக்மாலி ஹேமச்சந்திர வுக்கு எதிராக புதிய மக்கள் முன்னணி நேற்று நீதிச் சேவை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது.

புதிய மக்கள் முன்னணியின் கொலன் னாவ தொகுதி அமைப்பாளர் அஜித் புஷ்பகுமார, செயற்குழு உறுப்பினர் ஜயசிங்க, சீதாவக்க பிரதேச சபை உறுப்பினர் நாலக்க பண்டார மற்றும் இரத்மலானை அமைப்பாளர் சமன் ரணதுங்க ஆகியோர் இணைந்து, சட்டத் தரணியான லக்மாலி ஹேமச்சந்திர நீதிமன்றத்தை அவமதித்தார் என்று கூறி, நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரிடம் கடிதத்தைச் சமர்ப்பித்து இந்த முறைப்பாட்டினை அளித்தனர்.

முறைப்பாட்டைச் சமர்ப்பித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த சீதாவக்க பிரதேச சபை உறுப்பினர் நாலக்க பண்டார,


“சட்டத்தரணி லக்மாலி ஹேமச்சந் திர கடந்த திம்பிரிகஸ்யாய பிரதேச அபி விருத்திக் குழுக் கூட்டத்தில், ஒரு அரச நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்ட நீதி மன்றத் தீர்ப்பு ஒன்றைப் பகிரங்கமாக விமர்சித்ததுடன், அந்தத் தீர்ப்பைப் பொருள்படுத்தாமல் செயற்படுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

எனவே, நாட்டின் நீதிமன்றத்தின் கௌரவத்தைப் பாதுகாப்பதற்காக சட்டத் தரணி லக்மாலி ஹேமச்சந்திரவுக்கு எதிராகச் சட்டம் உடனடியாக அமுல் படுத்தப்பட்டு, அவருக்கு உரிய தண் டனை வழங்கப்பட வேண்டும் என்று நீதிச் சேவை ஆணைக்குழுவிடம் கோரு கிறோம்.

இதற்கு முன்னர் நீதிமன்றத்தை அவ மதித்த எஸ்.பி. திஸாநாயக்க போன்ற அரசியல்வாதிகளுக்கும் எதிராகச் சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்பட்டது. லக்மாலி ஹேமச்சந்திர விடயத்தில் எடுக்கப்படும் முடிவை நாங்கள் அவ தானிப்போம்.

லக்மாலி ஹேமச்சந்திர உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டும். அவரது சட்டத்தரணி தகுதி இரத்துச் செய்யப்பட வேண்டும். நீதிச் சேவை ஆணைக்குழு இந்த விடயம் குறித்து எடுக்கும் முடிவை நாடே உற்று நோக்குகிறது.” என்றார்.

அத்துடன், நீதிமன்றத்தை அவ மதித்த லக்மாலி ஹேமச்சந்திரவுக்கு எதிராக அதே நீதிமன்றத்தில் வழக்குத் தொடர புதிய மக்கள் முன்னணி எதிர் பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.



# உச்சத்தைத் தொடும் மரக்கறியின் விலை

நாட்டில் தற்போது நிலவி வரும் சீரற்ற வானிலை காரணமாக, எதிர் வரும் நாட்களில் மரக்கறிகளின் விலை உயர்வடையக்கூடும் என கொழும்பு மெனிங் சந்தை வர்த்தகர்கள் சங்கத் தின் முன்னாள் தலைவர் எஸ்.எம். உபசேன தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாகப் பெய்த கனமழையால் பயிர்ச்செய்கைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

எனவே எதிர்வரும் வாரங்களில் மரக்கறிகளின் விலை உயரும் என்பது வெளிப்படையானது என அவர் தெரி வித்துள்ளார். அவர் மேலும் தெரி விக்கையில்,

“வானிலை மாற்றங்களுக்கு முன்பு விலை குறைவாக இருந்தன. அது விவசாயிகளைப் பாதித்தது. இருப்பி னும், வரும் நாட்களில் விலை நிச்சய மாக உயரும்.

அத்துடன் இலங்கையில் ஏற்படும் காலநிலை மாற்றம் காரணமாக, வானிலை இப்போது மரக்கறிகளின் விலையை பாதிக்கும் ஒரு முக்கிய காரணியாக மாறியுள்ளது.” – என்றார்.



# கந்தனுடைய விரதமாம் கந்த சஷ்டி விரதம் இன்று ஆரம்பமாகிறது...!

**-விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா-**

கந்தசஷ்டி என்பது முருகக் கடவுள் சூரனை அழித்த பெருமையை சைவ சமயத்தவர்கள் கொண்டாடும் ஒரு விழாவாகும். சஷ்டி என்றால் ஆறு ஆகும். ஐப்பசி மாதம் சுக்கிலபட்ச பிரதமை முதல் சஷ்டி ஈறாக உள்ள ஆறு நாட்களும் கந்த சஷ்டி காலமாகும். இந்த ஆறு நாளையும் சைவர்கள் விரத நாள்களாக அனுட்டிக்கின்றனர்.

கந்த சஷ்டி விரதம் இருந்து முருகனை வணங்கினால் வாழ்வில் நன்மைகள் கைகூடும். ஐப்பசி மாதம் அமாவாசைக்கு மறுநாள் பிரதமை தொடங்கி சஷ்டி வரை உள்ள ஆறு நாட்களும் நோன்பிருந்து கந்த சஷ்டி விரதம் கடைபிடிக்க வேண்டும். நம் வாழ்க்கையில் எவ்வளவு துன்பங்கள் ஏற்பட்டாலும், எல்லாம் நொடியில் நீங்கி, எதிரிகள் ஒழிந்து முன்னேற்றம் உண்டாக, தன்னம்பிக்கை அதிகரிக்க சஷ்டி விரதம் இருந்து முருகப்பெருமானை வணங்க வேண்டும்.

இதனை உயிர் உணர்ச்சி வளர்க்கும் விரதம் என்பார்கள். அதனால் உப்பு நீர், எலுமிச்சம் பழச்சாறு, நார்த்தம் பழச்சாறு, இளநீர் ஆகியவற்றை கந்த சஷ்டி விரதம் இருப்பவர்கள் அருந்தக்கூடாது.

சூரசம்ஹாரம் வரை மிக எளிமையான சைவ உணவை கொஞ்சமாக உட்கொண்டு முருகனை நினைத்து விரதம் இருக்க வேண்டும். மதியம் ஒரே ஒரு முறை மட்டும் பச்சரிசி உணவுடன் தயிர் கொஞ்சம் சேர்த்து உண்ண வேண்டும். காலை, இரவு நேரத்தில் பால், பழங்கள் மட்டும் கொஞ்சம் சாப்பிடலாம். ஆனால், வயதானவர்கள், நோய் உள்ளவர்கள் விரதத்தின் போது உடல் நிலைக்கு தகுந்தபடி நடந்து கொள்ள விதிவிலக்குகள் உண்டு.

பிரதமை தொடங்கி சஷ்டி முடிய ஆறு நாள்களும் எதுவும் சாப்பிடாமல் விரதம் இருந்து, வள்ளி மணவாளனை பூஜை செய்பவர்களும் உண்டு. ஆறு நாட்களும் உபவாசம் இருக்க முடியாதவர்கள். சஷ்டி அன்று மட்டுமாவது எதுவும் சாப்பிடாமல் இருப்பது நல்லது.

செல்வங்கள், சுகபோகங்கள், நற்புத்திரப்பேறு என்பவற்றை முன்னிட்டு முருகனை குலதெய்வமாகவோ, இஷ்ட தெய்வமாகவோ வழிபடுவோரும் பிறரும் இந்த விரதத்தை அனுஷ்டிப்பர். இந்த ஆறு நாட்களும் சைவர்கள் விரதமிருந்து அதிகாலையில் எழுந்து நீராடி பூரண கும்பம் வைத்து விளக்கேற்றி பூசை வழிபாடு செய்வர்.

“அகரமும் ஆகி அதிபனும் ஆகி அதிகமும் ஆகி அகமாகி
அயன் எனவாகி அரி எனவாகி அரன் எனவாகி அவர் மேலாய்
இகரமும் ஆகி எவைகளும் ஆகி இனிமையும் ஆகி வருவோனே
இருநிலம் மீதில் எளியனும் வாழ எனது முன் ஓடி வர வேணும்
மகபதியாகி மருவும் வலாரி மகிழ் களி கூரும் வடிவோனே
வனமுறை வேடன் அருளிய பூஜை மகிழ் கதிர்காமம் உடையோனே
சககெனசேகு தகுதிமித்தோதி திமியென ஆடும் மயிலோனே
திருமலிவான பழமுதிர்சோலை மலை மிசை மேவு பெருமாளே.’”

தீவிர முருக பக்தர்கள் இவ்விரதத்தை ஒரு கடுந்தவமாகக் கருதி, ஆறு தினங்களும் உபவாசம் இருத்தல் வழக்கம். அமாவாசைத் தினத்தில் ஒரு வேளை உணவு உண்பர். இவ்விரத முறைமையை அனுசரிக்க இயலாதவர்கள் ஐந்து தினங்கள் ஒரு வேளை பால், பழம் மட்டும் அருந்தி, ஆறாம் நாள் உபவாசம் இருத்தலும் நடைமுறையாக உள்ளது. ஏழாம் நாள் பாரணை அருந்தி விரதத்தை நிறைவேற்றுவர். தொடக்க தினத்தில் ஆலயத்தில் தர்ப்பையணிந்து, காப்புக்கட்டல் அதாவது சங்கற்பம் செய்வது வழக்கம்.

பக்தர்கள் ஆறு தினங்களும் முருகன் ஆலயத்தில் இறைவழிபாடு, புராணபாடனம், போன்ற புனிதச் செயல்களில் ஈடுபடுவர். இறுதி நாளில் காப்பை அவிழ்த்து, தட்சணையுடன் அர்ச்சகரிடம் சமர்ப்பிக்க வேண்டும். ஏழாம் நாள் அதிகாலை நீராடி அனுஷ்டானங்களை நிறைவேற்றி, பாரணைப் பூஜை முடிந்ததும் மகேஸ்வர பூசை செய்து விரதத்தைப் பூர்த்தி செய்யலாம்.

மனிதர்களின் உட்பகையாக உள்ள காமம், வெகுளி, ஈயாமை (உலோபம்), மயக்கம், செருக்கு, பொறாமை ஆகிய அசுரப் பண்புகளை அழித்து, அவர்கள் தெய்வீக நிலையில் பெருவாழ்வு வாழ அருள் பாலிக்கும் இறைவன் ஆற்றலின் பெருமை கந்த சஷ்டி உணர்த்தும் மெய்ப்பொருள் ஆகும்.

முருகப் பெருமான் சூரசங்காரம் செய்து தேவர்களைக் காத்த அருட் செயலைக் குறிக்கும் இவ்விழாவின் ஆறாம் நாள் முருகன் ஆலயங்களில் ‘சூரன் போர்’ என்னும் சமய நிகழ்வு நாடக பாணியில் நடைபெறுவது வழக்கம்.

சூர சம்காரத்தின் முடிவில் முருகன் மா மரமாக நின்ற சூரனை தன் சக்தியாகிய வேலினால் பிளந்தார். பிளவுபட்ட மாமரம் சேவலும் மயிலுமாக மாறவும், சேவலை கொடியாகவும் மயிலை வாகனமாகவும் முருகன் ஏற்றுக்கொண்டார். இது கந்தபுராணத்தில் சொல்லப்பட்ட ஒரு நிகழ்ச்சியாகும்.

தொடர்ச்சி▼



# கந்தனுடைய விரதமாம் கந்த சஷ்டி விரதம் இன்று ஆரம்பமாகிறது...!

தொடர்ச்சி▲

கந்தபுராணத்தில் வரும் சூரபத்மன், சிங்கமுகன், தாரகாசுரன் ஆகியோர் முறையே சைவ சித்தாந்தத்தில் பேசப்படும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களைக் குறிப்பதாகக் கருதப்படுகின்றது. ஆன்மாவைத் துன்புறுத்தும் மலங்களின் கெடுபிடியில் இருந்து ஆன்மாவுக்கு விடுதலை அளிப்பதோடு ஆணவமலத்தின் பலத்தைக் குறைத்து அதனைத் தன் காலடியில் இறைவன் வைத்திருப்பதை உணர்த்துவதே சூர சம்காரமாகும்.

ஆறுபடை வீடுகளிலும், அனைத்து முருகன் கோயில்களிலும் இந்த ஆறு நாட்களிலும் சிறப்பான பூஜைகள் நடைபெறும். ஆறு நாள்கள் தொடர்ந்து விரதம் இருப்பவர்களும், இருக்க முடியாமல் போனவர்களும் கூட மாதந்தோறும் வரும் சுக்கில பட்சத்துச் சஷ்டியில் முருகப் பெருமானை வழிபட்டு விரதம் மேற்கொள்ளலாம்.

“பொன்னழகு மின்னிவரும் வண்ணமயில் கந்தா
கண்மலரில் தன்னருளைக் காட்டிவரும் கந்தா
நம்பியவர் வந்தால் நெஞ்சுருகி நின்றால்
கந்தா முருகா வருவாய் அருள்வாய் முருகா!”

மும்மலங்களை அழித்த முருகப்பெருமானின் விரதம். கந்தப் பெருமான் சூரனைச் சங்கரித்த பெருமையைக் கொண்டாடுவதே ஸ்கந்த சஷ்டி விரத விழாவாகும். முருகன் கோயில் கொண்டுள்ள எல்லா ஆலயங்களிலுமே ஸ்கந்தசஷ்டி விரதம் மிகச் சிறப்பாக ஆறு நாள்கள் அனுஷ்டிக்கப்படுகின்றது. ஐப்பசி மாதத்தில் வரும் வளர்பிறை சஷ்டி அன்றுதான் முருகப் பெருமான் சூரபத்மனை அழித்த நாள்.

# கந்தக் கடவுள் கருணையின் வடிவமே!



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.




வதைக்கும் எண்ணம் கொண்டவன் அல்ல
வளங்கும் எண்ணம் கொண்டவன் வேலன்
சினத்தை அடக்குவான் சிறப்பைக் கொடுப்பான்
சிங்கார வேலன் திருவருட் செல்வன்

ஆணவம் கொண்டால் அடக்கியே நிற்பான்
அடியினைப் பரவினால் அணைத்தே மகிழ்வான்
அன்புடன் வேண்டினால் அனைத்தும் அருளுவான்
அரனார் மைந்தன் அழகன் குமரன்

குன்றைத் தேர்ந்து அமர்ந்தான் குமரன்
குறைகள் களைந்திட வருவான் குமரன்
கன்றைத் தேடும் தாய்மனம் கொண்டவன்
கந்தக் கடவுள் கருணையின் உருவே !

# 36,178 ஆசிரியர்களுக்கு வெற்றிடம் நிலவுகின்றது

## கல்வி அமைச்சர் ஹரிணி அமரசூரிய தெரிவிப்பு

இலங்கை முழுவதும் உள்ள மாகாண மற்றும் தேசிய பாடசாலைகளில் மொத்தம் 36,178 ஆசிரியர் வெற்றிடம் நிலவுவதாக, கல்வி அமைச்சர் ஹரிணி அமரசூரிய நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதில், தேசிய பாடசாலைகளில் 1,501 வெற்றிடங்களும், மாகாண பாடசாலைகளில் 34,677 வெற்றிடங்களும் அடங்குகின்றன என அவர் குறிப்பிட்டார்.

மாகாண ரீதியில் பார்க்கும்போது, மேல் மாகாணத்தில் அதிகபட்சமாக 6,318 வெற்றிடங்களும், வடக்கில் 1,568 வெற்றிடங்களும், வடமேல் மாகாணத்தில் 3,271 வெற்றிடங்களும், கிழக்கில் 4,630 வெற்றிடங்களும் காணப்படுகின்றன எம அவர் சுட்டிக்காட்டினார்.



தேசிய பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம், வெளிநாட்டு மொழிகள், தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்காகவும் உயர்தர வகுப்புகளில் பட்டதாரிகள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நிலவும் வெற்றிடங்களுக்காக 2024 ஜூலை 28 ஆம் திகதி முதல் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன், எதிர்வரும் 2 மாதங்களில் 353 பட்டதாரிகளும் ஆசிரியர் சேவையில் உள்வாங்கப்படவுள்ளனர் என அவர் குறிப்பிட்டார்.

மேலும். அசிரியர் சேவையில் நிலவும் வெற்றிடங்களை முழுமையாக நிரப்புவதற்காக பிரதமரின் செயலாளரின் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு மதிப்பாய்வு குழுவிடம் கோரிக்கையொன்றை முன்வைத்து வெற்றிடங்களை நிரப்புவதற்காக அடுத்தக்கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

# நிதியியல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான ‘நிதியறிவுக் கண்காட்சி’ இன்று திருமலையில்!



(எஸ்.கீதபொன்கலன்)

இலங்கை மத்திய வங்கியின் கிழக்கு பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் இன்று புதன்கிழமை திருகோணமலையில் பொதுமக்களுக்கு நிதியியல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிதியறிவுக் கண்காட்சி இடம்பெறவுள்ளதாக பிராந்திய முகாமையாளர் கருப்பையா பிரபாகரன் தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கி தேசிய ரீதியில் முன்னெடுக்கின்ற நிதியறிவுக் கண்காட்சி என்ற நிகழ்வு நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்த வகையில் கிழக்கு மாகாணத்தை உள்ளடக்கிய திருகோணமலை பிராந்தியத்தின் ஏற்பாட்டில் இன்று புதன்கிழமை திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் காலை 8.30 மணிமுதல் இரவு 7.00 மணிவரை இந்தக் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியில் வங்கிச் சேவைகள். கொழும்பு பங்கு பரிவர்த்தனை – முதலீட்டு வழிகாட்டல்கள், ஊழியர் சேமலாப நிதியச் சேவைகள், ஊழியர் நம்பிக்கை நிதிய சேவைகள், கொடுகடன் தகவல் பணியகத்தினுடைய சேவைகள் உள்ளிட்டவையும், மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான தொழிற்பயிற்சி வழிகாட்டல்கள், தொழில் முயற்சியாளர் சந்தை, நாணய அரும்பொருட் காட்சியகம் என்பனவும் இடம்பெறவுள்ளன.

குறிப்பாக இலங்கை கொடுகடன் பணியகம் நடமாடும் சேவையில் இருப்பதால் இங்கு பொதுமக்கள் இலவசமாக தங்களுடைய கிறிப் அறிக்கையினை




பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. அது மட்டுமல்லாமல் பாடசாலை மாணவர்களுக்காக நாணய அரும் பொருட் காட்சியகம் இயங்கவுள்ளது. இதன்மூலம் ஆரம்ப காலத்தில் இருந்து நாணயம் எவ்வாறு வளர்ச்சியடைந்து சென்றிருக்கிறது என்பதையும் வெளியிடப்பட்ட ஞாபகார்த்த நாணயக் குற்றிகளையும் பார்வையிடக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. எனவே இந்த நிதியியல் கண்காட்சி மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் தொழில்முனைவோருக்கு மிகுந்த பயனுள்ளதாக இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.




# மட்டு. மேய்ச்சல் தரை பிரச்சினைக்கு மிக விரைவாக அரசு தீர்வைத் தரும்!

## நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு உறுதி தெரிவிப்பு

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மேய்ச்சல் தரைப் பிரச்சினைக்கு மிக விரைவாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தீர்வைப் பெற்றுத்தரும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு உறுதியளித்திருக்கின்றார்.

மட்டக்களப்பு மாவட்ட தேசிய மக்கள் சக்தி பிரதிநிதிகளுக்கும் மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையில் விசேட கலந்துரையாடலொன்று மட்டக்களப்பில் இடம்பெற்ற போதே மேய்ச்சல் தரை பிரச்சினைக்கு தமது அரசாங்கம் தீர்வைப் பெற்றுத்தருமென கந்தசாமி பிரபு தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்புக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, மட்டக்களப்பு மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகளை நேரடியாக சந்தித்து கலந்துரையாடும் சந்திப்பு மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனத்தின் அலுவலகத்தில் இடம் பெற்றது.

இதிக் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு, தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் கே.திலகநாதன், மட்டக்களப்பு மாநகர சபையின் உறுப்பினர் எஸ்.சுரேஸ் றொபட் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டம் சார்ந்த உரிமை மற்றும் அபிவிருத்தி விடயங்கள் குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டது.

சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பெண்ணுரிமை செயற்பாட்டாளர்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் இதில் கலந்து கொண்டு, தமது ஆக்கபூர்வமான கருத்துக்களை தெரிவித்தனர்.

கலந்துரையாடலின்போதுமிகமுக்கிய விடயமாகப் பேசப்பட்ட பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரை பிரச்சனைக்கு மிக விரைவாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தீர்வைப் பெற்றுத்தருமெனவும், தம்மை நம்பலாமெனவும் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்திருந்தார்.

கிரான் பாலம், வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்தல், கல்வி திணைக்களம் சார்ந்த பிரச்சினைகள் உள்ளிட்ட விடயங்களுக்கான தீர்வையும் மிக விரைவாக பெற்றுத்தருவார்கள் எனவும் உறுதியளித்திருந்தார்.

மேலும்முந்தனையாறுதிட்டம்அமைச்சரவை அனுமதிக்காக தாயார் நிலையில் உள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினரினால் தெரிவிக்கப்பட்டதுடன், கண்டியனாறு குள விஸ்தீரணம், சட்ட விரோத மண் அகழ்வு, போதைப்பொருள் ஒழிப்பு, மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் கடினமான பாடசாலை பட்டியலில் இருந்து நீக்கும் சுற்று நிருபம் வெளியிடப்பட்டதனால் எதிர்காலத்தில் ஆசிரியர் மற்றும் வள பற்றாக்குறைகள் ஏற்படலாம் என்பவை போன்ற மேலும் பல விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.














# தண்ணீர் போத்தலை ரூ.20 கூட்டி விற்ற நிறுவனத்திற்கு 1 லட்சம் ரூபா அபராதம்

பாறுஅரசாங்க கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு குடிதண்ணீர்ப் போத்தல் ஒன்றை விற்பனை செய்த குற்றச்சாட்டில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட பொத்துவில் அறுகம்பை பிரதேசத்தில் உள்ள ஒரு வர்த்தக நிலையத்திற்கு, பொத்துவில் நீதிவான் நீதிமன்றம் ஒரு லட்சம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையின் அம்பாறை மாவட்ட அலுவலகத்தின் பொறுப்பதிகாரி சாலிந்த நவரத்தனவினால் இந்த வழக்குத் தொடுக்கப்பட்டது.

1500 மில்லிலீற்றர் குடிநீர் போத்தலின் கட்டுப்பாட்டு விலை 130 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில், அந்த வர்த்தக நிலையம் அதனை 150 ரூபாவிற்கு விற்பனை செய்ததாக குற்றம்சாட்டி இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, குற்றம் சாட்டப்பட்ட வர்த்தக நிலையம் நீதிமன்றத்தின் முன் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டது.

தண்டனை வழங்குவதற்கு முன்னர் நீதிமன்றத்தில் சமர்ப்பணங்களை முன்வைத்த நுகர்வோர் விவகார அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரிகளான இஷட்.எம் ஸாஜீத் மற்றும் என்.எம் றிப்கான், இந்த குற்றத்திற்காக ஒரு இலட்சம் முதல் ஐந்து லட்சம் ரூபா வரை அபராதம் விதிப்பதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது என்பதைச் சுட்டிக் காட்டினர்.

முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை கருத்திற்கொண்ட நீதவான், குறித்த வர்த்தக நிறுவனத்திற்கு ஒரு லட்சம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

# ஆற்றுக்குள் கவிழ்ந்த கப் வாகனம்





**(உடப்பு க.மகாதேவன்)**

ஹெட்டிபொல பத்தகம்பொல பிரதேசத்தில் ஒரு போலிட்ரோ கப் ரக வாகனம் வீதியை விட்டு விலகி ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியது.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதன் போது அதில் பிரயாணம் செய்தவர்கள் சிறு காயங்கள் ஏற்பட்ட திலையில் அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலதிக விசாரணைகளை ஹெட்டிப்பொல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சீனக்குடாவில் கத்திக்குத்துச் சம்பவம்

**(எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலை சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கப்பல்துறை பகுதியில் கத்திக் குத்துக்கு இலக்கான நிலையில் ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கப்பல்துறை சமுர்த்தி வீதியில் உள்ள வீடு ஒன்றில் இன்று அதிகாலை 2.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் நடராஜ் என்ற 43 வயதான நபரே கத்திக்குத்துக்கு இலக்கான நிலையில் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது:-

நேற்று செவ்வாய்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் நாய் குரைக்கின்ற சத்தம் கேட்டு அவர் வெளியே வந்து வீட்டின் முன்னால் உள்ள கடைப் பகுதியை பார்த்தபோது இருவர் அவர் மீது தடியைக் கொண்டு தாக்குதல் நடத்தினர் எனவும் பின்னர் கத்தியால் குத்திவிட்டு அவர் அணிந்திருந்த சங்கிலி உள்ளிட்ட நகைகளை அபகரித்துச் சென்றனர் எனவும் தெரிய வருகின்றது.

அந்த இரு மர்ம நபர்களும் கடையை உடைத்துத் திருட வந்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சீனக்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்



# உயிர் அச்சுறுத்தல்களுக்கோ மிரட்டல்களுக்கோ அஞ்ச மாட்டேன் என்கிறார் வன்னி எம்.பி. ரவிகரன்

**(விஜயரத்தினம் சரவணன்)**

தமிழர்களின் உரிமைகளைப் பெறுவதற்காக கடந்த காலத்தில் தமிழ் இளைஞர் மற்றும் யுவதிகள் "நச்சுக் குப்பி" அணிந்துகொண்டு போராடினர் எனச் சுட்டிக்காட்டிய வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், தமக்கு விடுக்கப்படுகின்ற இவ்வாறான மிரட்டல்களுக்கும், உயிர் அச்சுறுத்தல்களுக்கும் தாம் ஒருபோதும் அஞ்சப்போவதில்லையெனவும் தெரிவித்துள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட தமிழர்களின் பூர்வீக பகுதியான திரிவச்சகுளம் மற்றும் அதனை அண்டியபகுதிகள் பெரும்பான்மை இனத்தவர்களால் அத்துமீறி ஆக்கிரமிக்கப்படுதை ரவிகரன் தொடர்ச்சியாக எதிர்த்து வருகின்றார்.

இந்நிலையில் திரிவைச்சகுளம் பகுதியில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை ஆக்கிரமிப்பதுடன், அதனை அண்டியபகுதிகளில் பாரிய அடர்வனங்களை அழித்து சட்டவிரோத ஆக்கிரமிப்பு செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்ற பெரும்பான்மை இனத்தைச்சார்ந்த ஒருவர் அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனினது பெயரைக்குறிப்பிட்டு உயிர் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இத்தகைய சூழலில் அண்மையில் தமிழ் அரசுக் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் ஒன்றில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போது, இந்த அச்சுறுத்தல் சம்பவத்தை மேற்கோள்காட்டி மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்திருந்தார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:–

நாங்கள் மக்களுக்கான சேவையில் முழுமையாக செயற்பட்டுவருகின்றோம். அந்தப் பணியைத்தான் கட்சி எமக்குத் தந்துள்ளது.

எனவேதான் எமது மக்களுடைய பிரச்சினைகளைக் கேட்டறிவதற்காக நாம் ஆழ்கடலுக்கும் செல்கின்றோம். இதுதவிர எமது வயல்கள்,ஆறுகள், குளங்கள், காடுகள், கிராமங்கள் என அனைத்து இடங்களுக்கும் சென்று எமது மக்களுடைய குறைபாடுகள் மற்றும் சிக்கல் நிலமைகள் தொடர்பில் கேட்டறிந்து அவற்றைத் தீர்த்துவைப்பதற்கான முழு முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றோம்.

அந்த வகையிலேதான் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தமிழர்களின் பூர்வீக திரிவச்சகுளம் பெரும்பான்மையினத்தவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை மற்றும் அதனை அண்டிய பாரிய அடர்வனங்கள் பெரும்பான்மை இனத்தவர்களால் சட்டவிரோதமான முறையில் அழிக்கப்பட்டு அபகரிப்புச் செய்யப்படுகின்றமை தொடர்பான விவகாரத்தில் தலையீடுசெய்து, அந்த அபகரிப்பு முயற்சிகளைத் தடுக்கின்ற விதமாகச் செயற்பட்டிருந்தேன்.

இந்நிலையில் அங்கு எமது தமிழ் மக்களின் பூர்வீக திரிவைச்சகுளம் வயல் நிலங்களை ஆக்கிரமித்து, அதனை அண்டிய பகுதியில் சட்டவிரோத காடழிப்பினை மேற்கொள்ளும் பெரும்பான்மை இனத்தைச் சார்ந்த ஒருவர் எனது பெயரைக் குறிப்பிட்டு எனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் கருத்துக்களைக் கூறினார் சிலர் என்னிடம் கூறினர். அத்தோடு அந்தப் பெரும்பான்மை இனத்தவர் எனது பெயரைக் குறிப்பிட்டுஉயிர்அச்சுறுத்தல்விடுக்கின்ற காணொளிகளையும் என்னிடம் சிலர் காண்பித்துள்ளனர்.

இவ்வாறு உயிர் அச்சுறுத்தல் விடுக்கின்ற குறித்த பெரும்பான்மை இனத்தவர்என்னைபற்றிமுழுமையாகஅறிந்து கொள்ளாமல் அவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கின்றார் என நினைக்கின்றேன்.

நாம் செல்லவேண்டிய அனைத்து இடங்களுக்கும் செல்வோம். எவரும் இவ்வாறு உயிர் அச்சுறுத்தல்களை விடுக்கின்ற விதமாகச் செயற்பட்டு எம்மைக் கட்டுப்படுத்த முடியாது.

இந்த இடங்கள் அனைத்தும் எமது தமிழ்மக்களுடைய பூர்வீக பகுதிகளாகும். இந்த இடங்கள் பெரும்பான்மை இனத்தவர்களுக்குரிய இடங்களில்லை. எனவே வடக்கு,கிழக்கு பூர்வீக தமிழர்தாயகம் என்கின்ற வகையில் எமது செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்துக் கொண்டேயிருப்போம். நாம் இங்கு வெறுமனே வீரவசனங்களைப் பேசிக்கொண்டிருக்கவில்லை. தொடர்ந்தும் ஓய்வின்றி மக்களுகாகான சேவைகளைச் செய்து கொண்டிருக்கின்றோம்.

குறிப்பாக நான் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்றேன். எனவே மக்கள் எனக்களித்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி என்னால் இயலுமான முழுமையான சேவையை மக்களுக்கு வழங்கிவருகின்றேன்.

இவ்வாறிருக்க இவ்வாறான உயிர் அச்சுறுத்தல்களுக்கும், மிரட்டல்களுக்கும் நாம் எதற்காகப் பயப்படவேண்டும்.

கடந்தகாலத்தில் "சயனைட்" குப்பிகளுடனேயே எமது இளைஞர்களும், யுவதிகளும் எமது உரிமைக்காகப் போராடினார்கள். அவ்வாறிருக்கும்போது எமது உரிமைகளைப் பெறுவதற்காக நாம் ஏன் பயப்படவேண்டும்?

இந்நிலையில் தற்போதும் எமது மக்களின் உரிமைக்காக நாம் ஜனநாயக முறையில் அரசியல் ரீதியாக போராடும்போது எம்மீது இவ்வாறாக உயிர் அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன. அதற்கு நான் பயப்படப்போவதில்லை. எமது மக்களின் உரிமைக்காக ஜனநாயக வழியில் தொடர்ந்தும் போராடுவதுடன், எமது மக்களின் நியாயமான கோரிக்கைகளைக் கேட்டுக்கொண்டேயிருப்பேன்.

ஏனெனில் எமது மக்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து, இந்த நாட்டின் உயரிய சபையான நாடாளுமன்றிற்கு என்னை அனுப்பி வைத்துள்ளார்கள். ஆகவேதான் நாடாளுமன்றில் எனது மக்களுக்காக பேசிக்கொண்டிருக்கின்றேன். தொடர்ந்தும் எனது மக்களுக்காக நாடாளுமன்றில் பேசுவேன். எமது மக்களின் நியாயமான கோரிக்கைகளை உரிய இடங்களுக்கு கொண்டுசென்று எமது மக்களின் கோரிக்கைகளையும், தேவைப்பாடுகளையும் நிறைவேற்றுவதுடன், எமது மக்களின் உரிமைக்காகவும் தொடர்ந்தும் குரல்கொடுப்பேன்.

இவ்வாறான உயிர் அச்சுறுத்தல்களுக்கு நாம் ஒருபோதும் அஞ்சப்போவதில்லை – என்றார்.

# வாழ்க்கைச் செலவு புள்ளிக்கு ஏற்ப சம்பள உயர்வு தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்!

## அகில இலங்கை ஐக்கிய ஊழியர் சங்க பொதுச் செயலர் முருகையா வலியுறுத்து



(மஸ்கெலியா நிருபர்)

கூட்டு ஒப்பந்தம் அமுலில் இல்லாத காரணத்தால் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வாழ்க்கைச் செலவுப் புள்ளி அடிப்படையில் சம்பள உயர்வை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அகில இலங்கை ஐக்கிய ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளரும், பெருந்தோட்டத் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் பிரதித் தலைவருமான எஸ். முருகையா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

1992 ஆம் ஆண்டு பெருந்தோட்டங்கள் தனியார் மயமாக்கப்பட்டன. அதற்கு முன்னதாக 1991 ஆம் ஆண்டு பெருந்தோட்டத் கைத்தொழில் அமைச்சில் அன்றைய அமைச்சர் ரூபா கருணா திலக தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்ட 9 அம்சக் கோரிக்கையின் அடிப்படையில் கூட்டு ஒப்பந்த முறை அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

அதற்கு ஏற்ப 1992 முதல் இடம் பெற்று வந்த பல்வேறு பேச்சுவார்த்தைகளின் பின்னர் 1994 முதல் கூட்டு ஒப்பந்தம் அமுல்படுத்தப்பட்டது. இ.தொ.கா. தலைவராக இருந்த அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான், அதுவரை வழங்கப்பட்டு வந்த வாழ்க்கைச் செலவுப் புள்ளி அடிப்படையிலான சம்பள முறை இனிமேல் தேவையில்லை என்றும், கூட்டு ஒப்பந்த முறையில் சம்பள உயர்வு தேவை என்றும் கூறியிருந்தார். அதனால், வாழ்க்கைச் செலவுப் புள்ளிக்கு ஏற்ப வழங்கப்பட்டு வந்த சம்பள உயர்வு முறை வாபஸ் பெறப்பட்டிருந்தது.

தொடர்ந்து, இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கம்பனிகளுக்கும் தொழிற் சங்கங்களுக்கும் இடையில் இடம்பெற்று வந்த பேச்சுவார்த்தையின் அடிப்படையில் கைச்சாத்தான கூட்டு ஒப்பந்தம் 2021 முதல் காலாவதியாகியுள்ளது. இப்போது கூட்டு ஒப்பந்தம் அமுலில் இல்லை என்பதும் குறிப்பிடத் தக்கது.

எனவே, அரசாங்க ஊழியர்களுக்கும் தனியார் துறை ஊழியர்களுக்கும் வாழ்க்கைச் செலவு புள்ளிக்கு ஏற்ப, ஆகக் குறைந்த சம்பளமாக 17, 900 ரூபா வழங்கப்பட்டு வருவதைப் போல, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கும் 25 நாள்களுக்கு 17,900 ரூபா வழங்கும் போது, ஒரு நாளைக்கு 700 ரூபாவுக்கு மேல் கிடைக்கும். இப்போது ஒரு நாளைக்குக் கிடைக்கும் 1350 ரூபாவோடு. 700 ரூபாவும் சேர்ந்தால் ஒரு நாளைக்கு 2050 ரூபாவுக்கு மேல் சம்பளம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

எனவே, அரசாங்கம் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வை இன்றுள்ள பொருளாதார சூ.நிலைக்கு ஏற்ப மனிதாபிமானத்துடன் அணுக வேண்டும். - என்றும் தெரிவித்துள்ளார்.

# சாவகச்சேரி நகரசபைப் பிரதேசத்தில் காணாமல் போன பொதுக் கிணறுகள்




(த.சுபேசன்)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் 37ஆக காணப்பட்ட பொதுக்கிணறுகளுடைய எண்ணிக்கை தற்போது 21ஆக குறைவடைய காரணம் என்னவென நகர சபை உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அண்மையில் நகரசபையில் இடம் பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர்கள் இக் கேள்வியினை எழுப்பியிருந்தனர்.

இது தொடர்பாக மேலும் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் –

சபை எல்லைக்குள் காணப்படுகின்ற தொல்பொருள் மரபுரிமைச் சின்னங்களைப்பாதுகாப்பதுடன்நகரசபைச்சொத்துக்களையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக சபை எல்லைக்குள் காணப்படுகின்ற சுமைதாங்கிகள்,பொதுக் கிணறுகள் மற்றும் பொது மலசலகூடங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

அண்மைக்காலமாக இவ்வாறான மரபுரிமைச் சின்னங்களை அழிக்கின்ற மற்றும் தனியாரின் சொத்துக்களுடன் இணைக்கின்ற செயற்பாடுகள் பல சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் இடம் பெற்றுள்ளன.

சபை எல்லைக்குள் 37பொதுக் கிணறுகள் காணப்பட்ட நிலையில் தற்போது 21 கிணறுகளே காணப்படுகின்றன. அவற்றைப் பேணிப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதுடன் –காணாமல் போன பொதுக் கிணறுகள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சில பொதுக்கிணறுகள் தனியார் காணிகளுடன் இணைக்கப்பட்டு இடித்து மூடப்பட்டுள்ளன.

எனவே நகரசபை விரைந்து நடவடிக்கை எடுத்து தனது சொத்துக்களை அடையாளப்படுத்தி பாதுகாப்பதுடன், தனியாரால் கையகப்படுத்தப்பட்டுள்ள பொதுச் சொத்துக்களையும் மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

# சாவகச்சேரியில் வியாபார உரிமம் இன்றி தொழில் செய்பவர்கள் மீது நடவடிக்கை

## நகர சபையில் அது குறித்து ஆராய்வு



(த.சுபேசன்)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் வியாபார உரிமம் இன்றித் தொழில் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென நகரசபை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர்கள் மேற்படி விடயத்தை தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பாக மேலும் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் –

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட அழகுபடுத்தல் நிலையங்கள் அனைத்தும் உரிய தரச் சான்றிதழ்களுடன் இயங்குகின்றனவா என்பதனை கண்காணிக்க வேண்டும் எனக் கடந்த சபையில் வலியுறுத்தியிருந்தோம்.

அவ்வாறு கண்காணித்த போது பல அழகுபடுத்தல் நிலையங்கள் வியாபார உரிமம் இல்லாத நிலையில் இயங்கி வருகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வியாபார உரிமம் இன்றி எவரும் தொழில் செய்ய முடியாது. இதனால் நகரசபைக்கான வருமானம் இழக்கப்படுகின்றது. நகரிலும் அதே நேரம் வட்டாரங்களிலும் பல தொழில் நிலையங்கள் வியாபார உரிமம் இன்றி இயங்கி வருகின்றன.

விடுதிகள் கூட வியாபார உரிமம் இன்றியும் அனுமதிகள் இன்றியும் இயங்கி வருகின்றன. அவ்வாறு உரிமம் இன்றிய விடுதிகளில் ஏதேனும் அசம்பாவிதம் இடம்பெற்றால் யார் பொறுப்புக் கூறுவது? அனுமதி இல்லாத விடுதிகளால் பொதுமக்களுக்கு ஆபத்து உள்ளது.

அதேநேரம் பலர் வீடுகளில் எந்தவித அனுமதியும் இன்றி பாரிய அளவில் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

இவற்றை எல்லாம் கண்காணித்து 2026ஆம் ஆண்டு மிக இறுக்கமான நடைமுறைகளைக் கொண்டுவர வேண்டும். – என மேலும் அவர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

# தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் மலையக இளைஞர் பங்கேற்கின்றார்!




(மஸ்கெலியா நிருபர்)

நுவரெலியா மாவட்டம் அக்கரபத்தனை புதிய பிரஸ்டன் தோட்டத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர் சசிகுமார் ரொஷான் நாளை மறுதினம் 24 ஆம் திகதி இந்தியாவில் நடைபெறவுள்ள தெற்காசிய நாடுகளுக்கிடையாளன விளையாட்டுப் போட்டியில் பங்கு கொள்வதற்காக நேற்று செவ்வாய்க் கிழமை இந்தியாவுக்கு பயணமாகியுள்ளார்.

இவர், அண்மையில் நடைபெற்ற 103 ஆவது அகில இலங்கை தடகளப் போட்டியில் 10,000 மீற்றர் தூரத்தை 30 நிமிடங்கள் 55 செக்கன்களில் நிறைவுசெய்துமுதலாம்இடத்தைப்பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பிங்கிரிய நகரில் நேற்றுக் காலை விபத்து



(உடப்பு க.மகாதேவன்)

சிலாபம் வாரியபொல வீதியில் பிங்கிரிய நகரில் நேற்று செவ்வாய்க் கிழமை காலை மோசமான வானிலைச் சூழலில், ஒரு வான் சாரதி கவனக்கு றைவாக வண்டியை செலுத்திய நிலையில் ஏற்பட்ட விபத்தில், தேங்காய்களை ஏற்றிச் சென்ற லொறியுடன் வான் மோதியது. இந்த விபத்தில் இரு வாகனங் களில் சாரதிகளுக்கும் காயங்கள் ஏற்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

# வெலிகந்தைப் பகுதியில் ரயிலுடன் மோதி காட்டு யானை ஒன்று மரணம்



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் இருந்து மாகோ நோக்கிச் சென்ற ரயில் மீது வெலி கந்தை பகுதிக்கும் அசேலபுர பகுதி க்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் காட்டு யானை ஒன்று மோதி உயிரிழந்தது. இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ள தாக ரயில்வேத் திணைக்களம் தெரி வித்தது.

எரிபொருள் டாங்கிகள் மற்றும் சரக்குகளை கொண்டு செல்லும் சரக்கு ரயில் நேற்று பகல் 2.15 மணியளவில் மட்டக்களப்பில் இருந்து மாகோ நோக் கிச் சென்ற போது ரயிலுடன் யானை மோதி உயிரிழந்தது.

உயிரிழந்த யானையை மீட்டு புதைப்பதற்கான நடவடிக்கையை வெலி கந்தை வனவிலங்கு திணைக்களத் தினர் முன்னெடுத்து வருகின்ற னர்.

# திருமலையில் கௌரிக் காப்பு வழங்கல்







**(எஸ்.கீதபொன்கலன்)**

கேதார கௌரி விரதம் நிறைவு பெற்றதை அடுத்து, பக்தர்களுக்கு விரதக்காப்பு வழங்கும் நிகழ்வு நேற்று திருகோணமலை ஸ்ரீ பத்தரகாளியம் பாள் தேவஸ்தானத்தில் நடைபெற்றது.

கடந்த 21 தினங்கள் விரதக்காப்பு நூல் கள். அம்பாளின் முன் வைக்கப்பட்டு தினமும் விசேட பூஜைகள் நடைபெற்று வந்தன.

இதனை அடுத்து, கடந்த 21 தினங் களாக விரதமிருந்த பக்தர்களுக்கு நேற்று காப்பு வழங்கி வைக்கப்பட்டது.

விரதமிருந்த ஆயிரக்கான பக்தர்கள் நேரிலும், வெளிநாடுகளில் வாழும் பக்தர்கள் பொதி சேவைகள் மூலமும் இன்றைய தினம் காப்பு நூல்களை பெற்றுக் கொண்டனர்.

திருகோணமலையில் இருநூற் றாண்டுகளுக்கும் அதிக காலம் அநுஷ்டிக்கப்பட்டு வரும் விரதம் என்ற வரலாற்றை கொண்ட இவ் கேதார கௌரி



விரதம், திருகோணமலையின் ஆன் மீக அடையாளங்களில் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது.

# கிண்ணியாவில் மேய்ச்சல் தரைக்கான போராட்டம் 30 மாடுகள் மீது கொடூர வாள் வெட்டுத்தாக்குதல்!

## நிலத்தகராறினால் பதற்றம்!






(முஹம்மட் றிஸ்னாத்)

கிண்ணியா பிரதேசத்தில் நிலவும் கால்நடை வளர்ப்பாளர்களுக்கும் வேளாண்மை விவசாயிகளுக்கும் இடையேயான நீண்டகால நில மீட்புப் போராட்டத்தின் உச்சகட்டமாக, நேற்றுக் காலை 30 மாடுகள் வாள் வெட்டுக்கு இலக்காகியுள்ள அதிர்ச்சிச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

கிண்ணியா குரங்குபாஞ்சான் இரட்டைக்குளம் பகுதியில் வைத்து நேற்றுக் காலை இச்சம்பவம் நிகழ்ந்துள்ளதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட கால்நடை வளர்ப்பாளர்கள் இது குறித்து கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

30 மாடுகள் வாள் வெட்டுக்கு இலக்காகியுள்ளன. 12 மாடுகளின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். மேலும் நான்கு மாடுகளைக் காணவில்லை எனவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாள் வெட்டுக்கு இலக்கான மாடுகள், கால்நடைகள் பராமரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, சிகிச்சை சிகிச்சை அளிக்கப்பட்டது.

சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக, கிண்ணியா பிரதேச கால்நடை விவசாயிகளுக்கும் வேளாண்மை விவசாயிகளுக்கும் இடையிலான நில மீட்புப் போராட்டம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது.

இந்த நிலையில், 2,876 ஹெக்டேயர் நிலம் மேய்ச்சல் தரைக்கு உரியது என மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த மே மாதம் 28 ஆம் திகதி தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பானது, கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரையின்றிப் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வந்த கிண்ணியா கால்நடை விவசாயிகளுக்கு வாழ்வில் விடிவை ஏற்படுத்தியிருப்பதாக அவர்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

எனினும், இத்தீர்ப்பைத் தொடர்ந்து, கிண்ணியா மற்றும் குறிஞ்சாக்கேணி கமநல சேவை நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட விவசாயிகள், தங்களுக்குரிய விவசாய நிலங்களில் பயிர் செய்வதற்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கித் தொடர்ந்து விவசாயம் செய்ய அனுமதிக்குமாறு கோரி தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு இணங்க, நீதிமன்றத்தால் அடையாளப்படுத்தப்பட்ட குறித்த பகுதிக்குள் விவசாயிகளை வேளாண்மை செய்ய அனுமதிக்க வேண்டாம் என கமநல சேவை திணைக்களங்களுக்கு கிண்ணியா பிரதேச செயலாளரால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிலையிலேயே நேற்றைய தினம் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் குறித்து கால்நடை வளர்ப்பாளர்கள் மிகுந்த கவலை தெரிவித்துள்ளனர். நீதிமன்றத் தீர்ப்பின் பின்னணியிலும் பதற்ற நிலை நீடிப்பதை இச்சம்பவம் எடுத்துக்காட்டுகிறது.

# 10 ரயில் சேவைகள் இன்றும் ரத்தாகும்




மலையக ரயில் மார்க்கத்தில் முன்னெடுக்கப்படும் 10 ரயில் சேவைகள் இன்று நண்பகல் 12 மணி வரை இரத்து செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

இஹலகோட்டைக்கு அருகே ரயில் ஒன்று தடம் புரண்டதன் காரணமாக இந்த சேவைகள் ரத்துச் செய்யப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தடம்புரள்வு காரணமாக நேற்று முன்தினமும், நேற்றும் மலையக ரயில் மார்க்கத்தில் பல சேவைகள் ரத்துச் செய்யப்பட்டிருந்தன.







# வெள்ளை மாளிகையின் ஒருபகுதி இடிப்பு; ட்ரம்பின் நீண்ட நாள் ஆசை நிறைவேறியது

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் நீண்ட நாள் ஆசையான அமெரிக்க வெள்ளை மாளிகையின் ஒரு பகுதியை இடிக்கும் பணிகள் நேற்று இடம்பெற்றன.

அமெரிக்காவின் அடையாளமாகவும், அந்நாட்டு ஜனாதிபதிகளின் வரலாற்றுச் சிறப்புமிக்க இல்லமாக வெள்ளை மாளிகை உள்ளது.

இந்த மாளிகையின் கிழக்குப் பகுதி கட்டடம் 1902ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

ட்ரம்ப் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், வெள்ளை மாளிகையின் ஒரு பகுதி இடிக்கப்பட்டு “போல்ரூம்“ அமைக்கப்படும் என்று அறிவித்திருந்தார்.

இது அவரின் கனவு என்பதோடு நீண்ட நாள் விருப்பம் ஆகும். அவரின் ஆசையைப் பூர்த்தியாக்கும் விதத்தில் அதற்கான கட்டுமான பணிகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ட்ரம்ப்,

“நாட்டின் ஒவ்வொரு ஜனாதிபதியும், வெள்ளை மாளிகை வளாகத்தில் மிகப் பிரமாண்ட விருந்துகள், கலை நிகழ்ச்சிகளுக்காக மக்களைத் தங்க வைக்க ஒரு பால்ரூம் வேண்டும் என்று 150 ஆண்டுகளுக்கும் மேலாகக் கனவு கண்டு வந்தனர்.

இந்தநிலையில் வரி செலுத்துவோருக்கு எந்த சிரமமும் இன்றி, இந்த கனவை செயல்படுத்திய முதல் ஜனாதிபதி நான் என பெருமைப்படுகிறேன்.” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பிரான்ஸ் முன்னாள் ஜனாதிபதிக்கு ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை





பிரான்ஸின் முன்னாள் ஜனாதிபதி நிக்கோலா சார்க்கோசி நேற்று தனது 5 வருட சிறைத்தண்டனைக்காக சிறையில் அடைக்கபட்டுள்ளார்.

பிரான்ஸின் வரலாற்றில் முன்னாள் அரச தலைவர் ஒருவர் சிறையிடப்படுவது இதுவே முதன்முறையாகும்.

இந்நிலையில் சார்க்கோசி அதிகாரப்பூர்வமாக சிறைக்கு செல்வதற்கு முன்னர் அவரது வதிவிடத்தில் வைத்து அவரது பிள்ளைகள் அவரை சந்தித்துள்ளனர்.

காலைபத்து மணியளவில் அவர் சிறையில் அடைக்கப்பட்ட பின்னர் அவரது விடுதலைக்கான கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அவரது சட்டத்தரணி அறிவித்துள்ளார்.

இந்த நிலையில் பிரான்ஸ் முன்னாள் ஜனாதிபதி சிறைக்கு அனுப்பப்பட்ட நிலையில், சிறையில் இருந்த ஏனைய கைதிகள் சார்கோசியை வரவேற்பதாக அறைகளில் இருந்து கூச்சலிட்டுள்ளனர்.

இதற்கிடையே சார்க்கோசியை சிறைக்குச் சென்று தான் பார்வையிடப் போவதாக நீதியமைச்சர் ஜெரால்ட் டார்மனா குறிப்பிட்டமை நீதித்துறையின் சுதந்திரத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் என அரச வழக்குத்தொடுனர் பணியகம் எச்சரித்துள்ளது.

மேலும், சார்க்கோசி தனது தேர்தல் பரப்புரைகளுக்காக லிபியாவில் கேர்ணல் கடாபிய ஆட்சியில் இருந்தபோது அவரிடம் இருந்து முறைகேடான முறையில் நிதிபெற்றதான குற்றச்சாட்டில் கடுமையான தண்டனைக்குரிய தீர்ப்பு அவருக்கு வழங்கப்பட்டது.

இந்த தீர்பை எதிர்த்து சார்க்கோசி மேன்முறையீடு செய்தாலும் இந்த மேன்முறையீட்டு வழங்கு விசாரணக்குக்கு எடுக்கபடும் வரை அவர் சிறையில் இருக்க வேண்டும் என முன்னைய தீர்ப்பில் குறிப்பிடப்பட்டதால் அவர் சிறைக்குச்சென்றுள்ளார்.

இதற்கிடையே கடந்த வெள்ளிக்கிழமை சார்க்கோசியை தனது எலிசே மாளிகைக்கு அழைத்த ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரன் அவருக்கு ஆறுதல் கூறியவிடயமும் வெளிவந்துள்ளது.

# தமிழகத்தில் 3 நாள்களுக்கு பலத்த மழை; 8 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை





தமிழகத்தில்ராமநாதபுரம், தஞ்சை, கடலூர் உட்பட 8 மாவட்டங்களுக்கு அதி கனமழைக்கான சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதேபோல அடுத்த மூன்று நாள்களுக்கு தமிழகத்தின் பல் வேறு மாவட்டங்களுக்கு கனமழைக் கான வாய்ப்பும் இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித் துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கையில்,

“இன்று தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளில் ஒரு காற்றமுத்த தாழ்வு பகுதி உருவாகி, காலை 8:30 மணி அளவில் ஆழ்ந்த காற்றமுத்த தாழ்வு பகுதியாக அதே பகுதிகளில் நிலவுகி றது. இது மேற்கு -வட மேற்கு திசையில் நகர்ந்து நாளை மதியம் தென்மேற்கு மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்க கடல் பகுதிகளில் வடதமிழக - புதுவை -தெற்கு ஆந்திரா கடலோரப் பகுதிகளுக்கு அப்பால் காற்றமுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக் கூடும். இது அதற்கடுத்த 24 மணி நேரத்தில் மேலும் மேற்கு வட மேற்கு திசையில் வடதமிழக புதுவை தெற்கு ஆந்திரா கடலோரப் பகுதிகளை நோக்கி நகர்ந்து மேலும் வலுவடைய கூடும்.

நேற்று தென்மேற்கு அரபிக் கடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றமுத்த தாழ்வு பகுதி இன்று அதே பகுதிகளில் நிலவுகிறது இது மேற்கு திசையில் மெதுவாக நகர்ந்து அடுத்த 24 மணி நேரத்தில் காற்றமுத்த தாழ்வு மண்டலாக வலுப்பெறக்கூடும். தெற்கு அந்தமான் கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இன்று விழுப்புரம், செங்கல்பட்டு, கடலூர், மயிலாடுதுறை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அதி கனமழையும், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, அரியலூர், பெரம்பலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் கன முதல் மிக கன மழையும், சேலம், திருச்சி, வேலூர், திருப்பத்தூர், தருமபுரி, மற்றும் புதுக் கோட்டை மாவட்டங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்பு உள்ளது.

நாளை சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப் பேட்டை மாவட்டங்களில் கன முதல் மிக கனமழையும், வேலூர், திருப்பத் தூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் மாவட்டங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னையை பொருத்தவரை இன்று மற்றும் நாளை வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். அதே போல சென்னையில் இன்று, மற்றும் நாளை நகரின் ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய கன முதல் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளது” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொடர் மழை எதிரொலி;

# தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலினின் தென்காசி பயணம் தள்ளிவைப்பு



தொடர் மழை எதிரொலியாக தென் காசி மாவட்டத்துக்கு முதல்வர் ஸ்டாலின் வருகை தள்ளி வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வடகிழக்கு பருவமழை முன்னெச்ச ரிக்கை நடவடிக்கை குறித்த ஆய்வுக் கூட்டம் தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத் துக்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண் மைத் துறை அமைச்சர் சாத்தூர் ராமச் சந்திரன் தலைமை வகித்தார்.

இந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து செய்தி யாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கை யில்,

“வடகிழக்கு பருவ மழை கடந்த 16 ஆம் திகதி முதல் தமிழகம் முழுவதும் பரவலாக பெய்து வருகிறது. இந்த முறை வடகிழக்கு பருவமழை அதிகமாக இருக் கும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. அதன் அடிப்படையில் தமிழக முதல்வர் அதிகாரிகளிடம் கலந்து ஆலோசித்து, எந்தெந்த பகுதிகளில் மழை அதிகமாக இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள் ளதோ அந்த பகுதி ஆட்சியர்களிடம் முன் னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்தார்.

தென்காசி மாவட்டத்தில் பொதுப் பணித்தறை கட்டுப்பாட்டில் 543 குளங் கள், ஊரக வளர்ச்சித் துறை கட்டுப் பாட் டில் 414 குளங்கள் உள்ளன. இவற்றில் 25 சதவீத குளங்கள் முழுமையாக நிரம்பியுள்ளன.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தென் காசி மாவட்டத்துக்கு 24, 25ஆம் திக திகளில் வருகை தருவதாக இருந்த நிலை யில், தொடர் மழையால் நிகழ்ச்சிக்காக ஏற்பாடு செய்யப்பட்ட இடத்தில் தண்ணீர் தேங்கியுள்ளது. இதனால் முதல்வர் வருகை தள்ளிப்போகிறது. மழை நின் றதும் முதல்வர் வரும் திகதி அறிவிக்கப் படும்.

தமிழகத்தில் தேசிய பேரிடர் மீட்புக் குழு, மாநில பேரிடர் மீட்புக் குழுவினர் தயார்நிலையில்உள்ளனர். எங்குபாதிப்பு ஏற்பட்டாலும் உடனடியாக சென்று, மீட்பு பணிகளை மேற்கொள்வார்கள்.”என்றார்.



# மருந்துகளுக்கான விலைச் சூத்திரம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றம்

மருந்துகளுக்கான விலைச் சூத்திரம் நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மருந்துகளுக்கான விலைச் சூத்திரம் நேற்று நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு, சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்படி, ஒவ்வொரு வகை மருந்துகளுக்கும் அதிகபட்ச விலை வரம்பு நிர்ணயிக்கப்படும் என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைச் சட்டத்தின் கீழ் ஒரு உத்தரவாக இது நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

# பாடசாலைகளுக்கான பாடப்புத்தகங்கள் அச்சிடும் பணிகள் நிறுத்தப்படவில்லை

## கல்வி அமைச்சு அறிவிப்பு

பாடசாலைகளுக்கான பாடப்புத்தகங்கள் அச்சிடும் பணிகள் நிறுத்தப்படவில்லை என்றும், அரசாங்கத்தின் முன்மொழியப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களின் கீழ் சில வகுப்புகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன எனவும் கல்வி அமைச்சு தெளிவுபடுத்தியுள்ளது.

இதன்படி அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் அமுலுக்கு வரும் கல்வி சீர்திருத்தங்களின் கீழ் வராத 2 முதல் 5 மற்றும் 7 முதல் 11 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் வழக்கம்போல் வழங்கப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கல்வி சீர்திருத்தங்களின் அடிப்படையில் 1 மற்றும் 6 ஆம் வகுப்புகளுக்கு பாடப்புத்தகங்கள் வழங்கப்படாது.

அதற்கு பதிலாக எளிமைப்படுத்தப்பட்ட கற்றல் கையேடுகள் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் ஆசிரியர்களுக்கான கற்றல் கையேடுகள் அச்சிடும் பணிகள் நிறுத்தப்படவில்லை என்றும், புதிய கல்விச் சீர்திருத்தங்களின் தேவைகளுக்கு ஏற்ப அவை அச்சிடப்படும் என்றும் நாலக களுவெவ தெளிவுபடுத்தினார்.

அத்துடன் 2 முதல் 5, 7 முதல் 11 ஆம் வகுப்புகளுக்கான பாடப்புத்தகங்களும், 1 மற்றும் 6 ஆம் வகுப்புகளுக்கான கற்றல் கையேடுகளும் தற்போது அச்சிடப்பட்டு வருகின்றன.

இவை நவம்பர் 15க்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கமைய நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளுக்கு விநியோகிக்கும் பணி டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் நிறைவடைய திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 22.10.2025


மேஷம்

உங்களிடம் அமைதியின்மை மற்றும் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இதனால் உங்கள் தன்னம்பிக்கை குறையும். என்றாலும் வெற்றி பெற நீங்கள் உற்சாகமாக முயல வேண்டும்.

உங்கள் மதிப்பை உங்கள் மேலதிகாரிகளிடம் நிரூபிக்க வளர்ச்சியை உண்டாக்கும் புதுமையான யோசனைகள் தேவை. இன்று பணிகளை சரியான நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படக் கூடாது. நல்லுறவைப் பராமரிக்க சகஜமான அணுகுமுறையும் அனுசரித்து நடந்து கொள்ளவும் வேண்டும்.

குடும்பத் தேவைக்காக நீங்கள் செலவு செய்ய நேரும். அது தேவையற்ற செலவாக இருக்கும். அதிக செலவு காரணமாக சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு.


ரிஷபம்

இன்று நன்மை தீமை எனப் பலன்கள் கலந்து காணப்படும். இன்று நிச்சய மற்ற தன்மை காணப்படும். முயற்சியில் வெற்றி பெறுவதற்கு மிகுந்த பொறுமை அவசியம்.

இன்று கவனக் குறைவு காணப்படும். உங்கள் செயல் திறன் மந்தமாக இருக்கும். பணியின் போது கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும் போது சகஜமாக இருக்க வேண்டும். அவரி கருத்துக்களை கவனமாக கேட்பதன் மூலம் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

செலவினங்கள் அதிகமாக காணப்படும். பாதுகாப்பிற்காக சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும்.


மிதுனம்

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் இலக்குகளை நீங்கள் அடைவீர்கள். முக்கியமான முடிவுகள் எடுக்க இது உகந்த நாள்.

சக பணியாளர்கள் உதவிகரமாக இருப்பார்கள். பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

பணப்புழக்கம் அபரிமிதமாக இருக்கும். சுப நிகழ்ச்சிகளுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.


கடகம்

உங்கள் இலக்குகளை அடைய கடுமையாகப் போராட வேண்டும். திட்டமிட்டு நம்பிக்கையுடன் செயலாற்ற வேண்டும். அஞ்சாத மன ஆற்றலும் நம்பிக்கையும் கொண்டால் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

இன்று நீங்கள் பொறுமையுடன் செயற்பட்டால் உங்கள் பணிகளை சிறப்பாக ஆற்ற இயலும். உங்களுக்கு கொடுக்கப்பட பணிகளைச் செய்யும் போது யோசித்து சிறப்பாக ஆற்ற வேண்டும்.

குடும்ப பிரச்சினை காரணமாக தம்பதியரிடையே கருத்து வேறுபாடு காணப்படும். எனவே நட்பு முறையோடு அணுகினால் நல்லுறவைப் பராமரிக்கலாம்.

இன்று ஏற்படும் கூடுதல் செலவு காரணமாக உங்களுக்கு வருத்தம் ஏற்படும். இது தவிர்க்க முடியாதது.


சிம்மம்

முக்கியமான நேரங்களில் நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இது உங்களின் வளர்ச்சியை பாதிக்கும். பெரியவர்களின் ஆலோசனை கேட்டு நடந்து கொள்வது சிறந்த பலனைத் தரும்.

இன்று பணியில் மிதமான வளர்ச்சியே காணப்படும். பணிகள் அதிகமாக காணப்படும். இதற்கு நேரம் செலவாகும். உங்கள் கீழ் பணிபுரிபவர்களுடனான உறவு சிறப்பாக இருக்காது.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். பாதிப்பு தரக்கூடிய அத்தகைய உணர்வுகளை தவிர்த்தால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

பணப்புழக்கம் ஏமாற்றத்தை அளிக்கும் விதமாக இருக்கும். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக உங்கள் அடிப்படைத் தேவைகளை சமாளிப்பது கூட கடினமாக இருக்கும்.


கன்னி

இன்று நீங்கள் அமைதியின்றி உணர்ச்சி வசப்பட்டு இருக்கும் வகையிலான சூழ்நிலை காணப்படும். இன்று சமநிலையோடு இருக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதல் மற்றும் வளர்ச்சியை அளிக்கும்.

திறமையாக பணியாற்ற பணிகளை ஆற்றும் போது கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.

இன்று உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாக, பேசுவதற்கு முன் யோசித்து பேச வேண்டும்.

இன்று பயணத்தின் போது பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. பணத்தைக் கையாளும் போது கவனம் தேவை.

உங்கள் தந்தையின் உடல் நலத்திற்காக பணத்தை செலவு செய்ய நேரும்.


துலாம்

இன்று செழிப்பாக இருக்க நீங்கள் கடுமையாக முயற்சிக்க வேண்டும். இன்று நல்ல பலனடைய அதிர்ஷ்டமான நாள். விரைந்து முடிவெடுத்தல் மற்றும் இடைவிடாத முயற்சி மூலம் இது சாத்தியம். இந்து மகிழ்ச்சி கரமான நாளாக இருக்கும்.

இன்று பணியிடத்தில் திருப்தி காணப்படும். உங்கள் திறமைகளை நிரூபிப்பதற்கான புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவருக்கும் இடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். இன்று உங்களுக்கு ஊக்கத் தொகை போன்ற வகையில் விரைவாகப் பணம் கிடைக்கும்.


விருச்சிகம்

உங்கள் லட்சியங்களை அடைய இன்று சாதகமான நாள். இன்று மகிழ்ச்சியான தருணங்கள் காணப்படும். முக்கிய முடிவுகள் எடுப்பது நல்ல பலனைத் தரும்.

புதிய வாய்ப்புகள் உங்களுக்கு நல்ல பலன் தரும். உங்கள் பணிகளை முடிக்க ஏதுவான சூழ்நிலை காணப்படும்.

உங்கள் துணையுடன் நட்பு முறையோடு பழகுங்கள். உங்கள் வீட்டில் நடக்கவிருக்கும் முக்கியமான விழா பற்றி கலந்தாலோசிப்பீர்கள்.

நிதி வளர்ச்சி இன்று ஸ்திரமாக இருக்கும். சேமிப்பின் மூலம் உங்கள் நிலை உயரும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். திருப்தியான மன நிலை காரணமாக நல்ல உடல் நிலை காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 22.10.2025




இன்று மிதமான பலன்களே கிடைக்கும். இன்றைய கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க தேவையான ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்கள் மனதை ஆன்மீகத்தில் ஈடுபடுத்துவதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

பணியிடத்தில் சில சவால்கள் காணப்படும். ஆனால் திட்டமிட்டு செயலாற்றினால் சமாளிக்கலாம். ஈடுபாட்டுடன் பணி செய்தால் சிறந்த பலன்கள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் உரையாடும் பொழுது கவனம் தேவை. உங்கள் பிரியமானவருடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது.

தேவையற்ற செலவினங்கள் காணப்படுவதால் கவனமாகச் செலவு செய்ய வேண்டும். நிதி வளர்ச்சியில் சில தடைகளை எதிர்கொள்வீர்கள்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். உங்கள் இலக்குகளை எளிதில் அடையலாம். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலன்களைத் தரும்.

இன்று வளர்ச்சி காணப்படுகின்றது. பணியில் மும்மரமாக காணப்படுவீர்கள். திட்டமிடுவதன் மூலம் திறமையாகப் பணியாற்றலாம்.

உங்கள் துணையிடம் நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவருக்குமிடையிலான உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்கள் தேவைகளை சமாளிக்க சிறிய அளவிலான கடன்கள் வாங்குவீர்கள்.

இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும். ஆரோக்கியக் குறைபாடு ஏதும் இருக்காது.




இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும். பொறுமையுடனும் உறுதியுடனும் நீங்கள் சமாளிக்க வேண்டும். விஷயங்கள் உங்கள் கட்டுப்பாட்டை மீறிக் காணப்படும். அமைதியான அணுகுமுறை கொண்டு கையாள வேண்டும்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற இயலாது. சகபணியாளர்கள் ஒத்துழைக்க தவறுவார்கள். மேலதிகாரிகளின் பாராட்டும் கிடைக்காது.

உங்கள் துணையிடம் வன்மையான போக்கை காண்பித்து கடுமையாகப் பேசுவீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய போக்கை கைவிட வேண்டும்.

வரவை விட செலவு அதிகமாக இருக்கும். நிதி நிலையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.




உங்கள் இலட்சியங்களை அடைவதற்கு இன்று சாதகமான நாள். இன்றைய நாளின் செயல்களை நீங்கள் எச்சரிக்கையுடனும் விவேகத்துடனும் செய்வீர்கள். சமயோஜித புத்தியின் மூலம் செயல்படுவதால் நல்ல பலன்கள் கிடைக்கும்.

பணியின் செயல்திறனில் வளர்ச்சி காண்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் அர்ப்பணிப்புடன் பழகுவீர்கள். உங்களின் இந்த அணுகுமுறை காரணமாக உறவில் மகிழ்ச்சி நிலவும்.

உங்களின் கடின உழைப்பின் மூலம். ஊக்கத் தொகை மற்றும் சலுகை வகையில் சில கூடுதலான பணம் பெறுவீர்கள்.



# 2025 இல் இதுவரையான காலப்பகுதியில் 40,633 பேர் பாதிப்பு; 22 மரணங்கள் பதிவு

2025 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில், நாடு முழுவதும் 40,633 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக டெங்கு நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களில் அதிகளவானோர் மேல் மாகாணத்திலேயே கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் டெங்கு நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவின் சமூக மருத்துவ நிபுணர் பிரஷிலா சமரவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அதிக ஆபத்துள்ள மாவட்டங்களாக கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, குருநாகல், இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய 11 மாவட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என அவர் கூறியுள்ளார்.

இதனிடையே, இந்த காலப்பகுதியில் டெங்கு நோயினால் 22 மரணங்கள் பதிவாகியுள்ளன.

அத்துடன், அதிக எண்ணிக்கையிலான உயிரிழப்புகள் இரத்தினபுரி மாவட்டத்தில் பதிவாகியுள்ளன என மருத்துவ நிபுணர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தநிலையில், நுளம்பு பெருக்கமடைவதை தவிர்த்து, சுற்றுப்புறங்களைச் சுத்தமாக வைத்திருக்குமாறும் டெங்கு நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவின் சமூக மருத்துவ நிபுணர் பிரஷிலா சமரவீர பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார்.